
# ஜீவ மன்னா

JESUS NEVER FAILS
DIVINE GOOD NEWS CENTER




## அனுதினமும்

**2016 ஒகஸ்ட்**


59 வது வெளியீடு

முறையான ஜெப நிலை



ஏனைய ஜெப நிலைகள்






ஏனைய ஜெப நிலைகள்

அட்டைப் படத்தின் கதை உட்புறத்தில்...!





# "முழங்கால் ஜெபம் பழைய முறையெனக் கருதுகின்றீர்களா?"



## அன்பார்ந்த தேவ பிள்ளைகளே!

இம்முறை எமது அட்டைப் படத்தில் காணப்படுவது, தேவனுடைய பிள்ளைகள் ஜெபங்களை ஏறெடுக்கும் காட்சிகளையாகும். பரிசுத்த வேதாகமத்தில் பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் பெரும்பாலான "தேவ மனிதர்கள்" முழங்காலில் இருந்து ஜெபித்ததைக் குறித்து எழுதப்பட்டுள்ளது. அவர்கள் "முழங்கால் ஜெபத்திற்கூடாக" அநேகமான "ஆத்மீக வெற்றிகளைப்" பெற்ற நிகழ்வுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. அவைகளில் "தானியேல்" தீர்க்கத்தரிசியின் ஜெபமே முதலிடத்தை வகிக்கின்றது. (தானியேல் 6:9-13) தன் மேல் அறையிலே எருசலேமுக்கு நேராகப் பலகணிகள் திறந்திருக்க அங்கே தான் முன் செய்து வந்தபடியே "தினம் மூன்று வேளையும் இடைவிடாது தன் தேவனுக்கு முன்பாக முழங்கால்படியிட்டு ஜெபம் பண்ணி ஸ்தோத்திரம் செலுத்தினான்."



அப்படியே புதிய ஏற்பாட்டுக் காலத்தில் வல்லமையான சீஷர்களான "பவுல், பேதுரு" என்பவர்கள் "முழங்காலிருந்து" "ஒருமனப்பட்டு ஜெபம் பண்ணினார்கள்" என எழுதப்பட்டுள்ளது. எங்கள் இயேசுகிறிஸ்துவும் முழங்காலிருந்து ஜெபம் செய்ததாக பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளது. ஆனால் நிகழ் காலத்தில் தேவ பிள்ளைகள் "முழங்கால் ஜெபம் அவசியமில்லையென்றும், அதில் விஷேசமானது ஒன்றுமில்லை எப்படியாயினும் ஜெபிக்க முடியுமென கூறுவது மிக கவலைக்குரியதாகும்."



ஆகையால் தேவ பிள்ளைகளே! தேவ சபைக்குள் "ஜெப ஆராதனைகள்" நிகழ்த்துகின்ற வேளைகளில் தமக்கு அவசியமானதும், "இலகுவான" முறைகளையும் கைக்கொண்டு, சில வேளைகளில் நான் எனது பரலோக பிதாவோடு பேசுகின்றேன். எனது இராஜாதி இராஜாவோடு பேசுகின்றேன் என்ற எண்ணமின்றி எந்த விதமான கௌரவமும் தேவ பயமும் இல்லாதபடி தேவனின் பாதத்திலிருக்கிறார்கள். ஆனாலும் "நாம் அனைத்திலும் எடுத்துக் காட்டாக வாழ்ந்து" நம் இயேசுகிறிஸ்துவை பின்பற்றி மிக பக்தியோடும், கௌரவத்தோடும் முழங்காலிருந்து ஜெபிக்கும் போது அது எவ்வளவு விலையேறப் பெற்றது? நீங்களும் இப்படியாக சம்பிரதாய பூர்வ ஜெபங்களைவிடுத்து, முழங்காலிருந்து ஜெபிக்கப் பழகி தேவ ஆவியானவரின் வல்லமையைப் பெற்றுக் கொள்ள முற்படுங்கள்.

☞ அட்டைப்படத்தின் பின்பக்கத்தில் உட்புறத்தில் பார்க்கவும்.

# மகிமை! மகா பரிசுத்த தேவனுக்கே

## ஆசிரியர் உரை

### ஜீவ மன்னா விமர்சனங்களை வரவேற்கிறோம்!

கிறிஸ்துவுக்குள் அன்பான தேவ பிள்ளைகளே,

எமது இரட்சகர் இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துகின்றேன். ஜீவ மன்னா தினமஞ்சரி வெளியீடுகளை எந்த வித தடைகளும் ஏற்படாத வண்ணம் தொடர்ந்து தொகுத்து உங்கள் கரங்களுக்களிக்க ஒத்தாசை புரியும் தேவ அநுக்கிரகத்திற்காக தேவனை ஸ்தோத்தரிக்கின்றேன்! 58 மாதங்களும் அனைத்து பொருளாதாரத் தேவைகளையும் சந்தித்த தேவனுக்கே சகல, துதி, கனம், மகிமையும், கௌரவமும் உரித்தாகட்டுமென பிரார்த்திக்கின்றேன்.

எமது ஜீவ மன்னா புத்தகத்தை கடந்த காலத்தை விட சற்று பெரிதாக்கியிருப்பதை உங்களுக்குக் கூற விரும்புகிறேன். ஜீவ மன்னா புத்தகமானது அகலத்தில் 1¼" அங்குலமும் உயரத்தில் 1½" அங்குலமும் பெரிதாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தினச் செய்தியையும், வேதாகம வசனங்களையும் கூடுதலாக எழுதுவதற்கொரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. ஆகையால் தேவனின் பிள்ளைகளுக்கு சற்று அதிகமாக கர்த்தரைக் குறித்த காரியங்களை எடுத்துரைக்க தேவன் கொடுத்த அருமையான சந்தர்ப்பத்தையிட்டு பெருமகிழச்சியடைகிறோம்.

அன்பார்ந்த ஜீவ மன்னா வாசகர்களே! இப்புத்தகத்தை வாசிப்பதன் மூலம் நீங்கள் பெறுகின்ற ஆசீர்வாதங்கள், ஆத்மீக உயர்வு இவைகளைக் குறித்து எமக்கு எழுத மறந்து விடாதீர்கள். ஜீவ மன்னா தினமஞ்சரியானது அகலத்திலும் நீளத்திலும் பெரிதாக்கப்பட்டிருப்பதால் ஆத்மீகத்தில் நீங்கள் தேவனைப்பற்றி மேலதிகமாகக் கற்றுத் தேர்ச்சியடைந்து செழிக்க வேண்டுமென வாழ்த்துகிறேன். உங்கள் புதிய ஆலோசனைகளை, குறைவு, நிறைவுகளை எமக்கு எழுதியனுப்புங்கள். அப்படிச் செய்வதனால் எமக்கு இன்னும் புதிய உற்சாகத்தோடு பரலோக இராஜ்யத்தின் காரியங்களை நிறைவேற்ற முடியும் என எண்ணுகின்றேன். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

பரலோக பொக்கிஷங்களைத் தேடுங்கள்!<br>
பூமிக்கு உரியவைகளை நோக்காதிருங்கள்!<br>
பாரெங்கும் நற்செய்தி மொழிந்திடுங்கள்!<br>
பாவிகள் விடுதலை பெற ஜீவ மன்னாவை பகிர்ந்திடுங்கள்!

இப்படிக்கு<br>
இயேசு கிறிஸ்துவுக்குள்<br>
போதகர் ஏ.ஜே.ஜோசப்<br>
இயேசு கைவிடார் சுவிஷேசப் பணியகம்

**மன்னா வாசகர்களே TM இலக்கத்தை அனுப்ப மறந்துவிட வேண்டாம்.**

ஜீவ மன்னா

ஒகஸ்ட்

**01** திங்கள்

# உங்கள் கட்டுக்களை அவிழ்த்து உங்களை மீட்டுக் கொள்ளும் தேவன்!

வேதவாசிப்பு

வெளி. அதி: 02-03

"கர்த்தாவே, நான் உமது அடியேன்; நான் உமது அடியாளின் புத்திரனும், உமது ஊழியக்காரனுமாயிருக்கிறேன்; என் கட்டுகளை அவிழ்த்துவிட்டீர்."
(சங்கீதம் 116:16)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் மாதத்தின் முதல் நாளான இன்று **இயேசுகிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாக வாழும்படி வாழ்த்துகின்றேன்.** அத்தோடு உங்களை சூழ்ந்துள்ள கட்டுக்களினின்று உங்களுக்கு இன்று விடுதலை கிடைக்கும்படியாக வாழ்த்துகின்றேன். ஆகையால் **இன்று நீங்கள் உங்கள் வாழ்வை சிருஷ்டித்த தேவனிடம் ஒப்புவித்து எல்லா சிறையிருப்புகளினின்றும் விடுதலையாக்கும்படி வேண்டிக் கொள்ளுங்கள்.**

தேவ பிள்ளைகளே! இன்றைய நாளில் முதல் முறையாக இந்த தேவ செய்தியை வாசிப்பவராகவிருக்கலாம். ஆனாலும் இன்று **உங்கள் வாழ்வை உங்களை சிருஷ்டித்த தேவனிடம் அர்ப்பணிப்பீர்களானால் தேவன் உங்களைப் புறம்பே தள்ளாது உங்களைக் காப்பாற்றுவார்.** மனித வாழ்வில் சரீர சிறையிருப்புக்கள், ஆவிக்குரிய சிறையிருப்புக்கள் என்று இரண்டு வகையான கட்டுக்கள் காணப்படுகின்றன. இவைகளிலிருந்து நீங்கள் விடுதலை பெறுவது ஆத்துமாவிற்கும், சரீரத்திற்கும் உரிமையுடையவரான தேவனால் மாத்திரமே ஆகும். தேவனாகிய **"கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணிலே உருவாக்கி ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான்." மனிதன் மண்ணினால் உருவாக்கப்பட்டபடியினால் அவனது சரீரமானது மரணத்தின் பின்னர் மீண்டும் மண்ணாகவே பூமியோடு சேர்ந்து விடுகின்றது.**

தேவ பிள்ளைகளே! ஆனாலும் மனிதனுக்குள் இருக்கின்ற ஆத்துமாவானது மரணத்திற்குப் பின்னரும் தொடர்ந்திருக்கும். ஆகையால் **அவனது ஆத்துமாவானது நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளும்படியாக பரலோக இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க எல்லா கட்டுக்களிலிருந்தும் அவிழ்க்கப்பட வேண்டியது மிக அவசியமாகும்.** ஆகையால் இன்றும் உங்கள் உள்ளமானது போராட்டங்களில் கலக்கமுற்று காணப்படுவதனால் வேதனையில் வாழ்வீர்களாயின் தேவனுக்குள் மனந்திரும்பி வாருங்கள். **சங்கீதம் 116:16**இல் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி **"தேவன் உங்கள் ஆத்துமாவில் இடையூறுகளை ஏற்படுத்தும் தடைச் சுவறை நிர்மூலமாக்கி தேவன் உங்களை மீட்டு நெருங்கிய சம்பந்தத்தை மீண்டுமாக ஏற்படுத்திக் கொள்வாராக." தேவனுக்குள் மகிழ்ந்திருங்கள். மகிழ்ச்சிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் எனது எல்லா கட்டுக்களினின்றும் என்னை மீட்ட தேவன் என்பதால் உங்களுக்கு ஸ்தோத்திரம்! இன்றும் என் உள்ளத்தை வேதனைப்படுத்தும் கட்டுக்களை என்னிலிருந்து அவிழ்த்துப் போடுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்." (சங்கீதம் 91:15)

ஜீவ மன்னா

ஓகஸ்ட்

02 செவ்வாய்

கர்த்தர் தமது
ஜனத்தின் நிந்தையை
பூமியிலிராதபடி
நீக்கி விடுவார்!

வேதவாசிப்பு

வெளி.
அதி: 04-05

**"இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், பாபிலோன் ராஜாவின் நுகத்தை முறித்தேன்."** (எரேமியா 28:2)

அருமையான தேவ பிள்ளைகளே! **இன்றைய நாளில் நீங்கள் விண்ணப்பிக்கிறதற்கும், நினைக்கிறதற்கும், ஜெபிக்கிறதற்கும் மேலாக தேவன் உங்களை ஆசீர்வதிக்கும்படியாக இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் வாழ்த்துகின்றேன்.** எங்கள் இயேசுகிறிஸ்து **நமக்கு சந்தோஷம், சமாதானம், சுகம்** என்பவற்றைக் கொடுத்து பாதுகாத்து எங்களை கரிசனையோடு வழி நடத்துகின்ற தேவனாவார். ஆகையால் **இன்றைய நாளிலும் உங்கள் வாழ்வை தேவனிடம் அர்ப்பணியுங்கள்.**

தேவ பிள்ளைகளே! இயேசுகிறிஸ்து எமக்குக் கூறியிருப்பது **மத்.11:30**இல் "**என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது**" என்றே. ஆனாலும் நாம் தேவ கட்டளைகளுக்கு அப்பாலே சென்று பலவிதமான சுமைகளை சுமந்து கொண்டிருக்கிறோம். எப்படியாயினும் எமது நுகத்தடியானது நாம் சுமக்க முடியாத அளவு அதிக பாரமாக இருக்கின்றது. **நாம் எமது நுகங்களை தேவனிடம் அர்ப்பணிப்போமாகில் எமது வாழ்வில் அதிகமான உபத்திரவங்கள், வேதனைகள், போராட்டங்களைத் தரும் நுகத்தடிகளை முறித்து நிர்மூலமாக்கி விடுவார். எரேமியா 28:2**இல் தேவன் கூறுவது, "**பாபிலோனிய ராஜாவாகிய நேபுகாத்நேச்சரின் நுகத்தை முறித்தேன்**" என்றாகும். ஏனென்றால் **பாபிலோனிய ராஜாவான நேபுகாத்நேச்சர் யூத ராஜாவான எகொனியாவையும் சிறைப்பிடிக்கப்பட்ட யூதர்களையும், கர்த்தருடைய ஆலயத்தின் பணிமுட்டுக்கள் எல்லாவற்றையும் பாபிலோனியாவிற்கு கொண்டு சென்றிருந்தார்.** அப்பொழுது அனனியா தீர்க்கத்தரிசி கர்த்தருடைய ஆலயத்திலே ஆசாரியர்களும் சகல ஜனங்களும் பார்த்திருக்க எரேமியா தீக்கத்தரிசியை நோக்கி "**கர்த்தருடைய ஆலயத்தின் பணிமுட்டுக்களை~யெல்லாம் நான் இரண்டு வருஷ காலத்திலே இவ்விடத்திற்குத் திரும்பக் கொண்டு வரப்பண்ணுவேன். பாபிலோன் ராஜாவின் நுகத்தை உடைப்பேன்**" என்றார்.

தேவ பிள்ளைகளே! **உள்ளம் கலங்காதீர்கள்! உங்கள் நுகம் எவ்வளவு பெரிதாயினும், பாரமாக இருப்பினும் அதை தேவனுக்கு முறித்துப் போட முடியும்.** பாபிலோனிய ராஜாவின் நுகம் முறிக்கப்படுகையில் சிறையிருப்பில் இருந்த யூதர்கள் விடுதலை பெற்றார்கள். அவ்வண்ணமாக உங்கள் வாழ்வில் நீங்கள் சுமக்கும் நுகத்தடி முறிக்கப்படுகையில் நீங்களும் முழுவதுமாக விடுதலை பெறுவீர்கள். **உங்கள் நுகத்தடியை இயேசுகிறிஸ்துவிடம் ஒப்படையுங்கள். தேவன் அதனை முறித்துப் போட்டு விடுவார். உங்களுக்கு வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் இயேசுவே! நீங்கள் நுகத்தடியை முறித்துப் போடும் இன்றும் எனது நுகங்களை உங்கள் குமாரனான இயேசுகிறிஸ்துவின் கரங்களில் ஒப்புக் கொடுக்கிறேன். நீங்கள் அனைத்திலுமிருந்து விடுதலை தாருங்கள். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார்; கர்த்தராகிய தேவன் எல்லா முகங்களிலுமிருந்து கண்ணீரைத் துடைத்து, தமது ஜனத்தின் நிந்தையைப் பூமியிலிராதபடிக்கு முற்றிலும் நீக்கிவிடுவார்; கர்த்தரே இதைச் சொன்னார்." (ஏசாயா 25:8)

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
03 புதன்

நீங்கள்
இனி நீர்ப்பாய்ச்சலான
தோட்டம் போலிருப்பீர்கள்!

வேதவாசிப்பு
வெளி.
அதி: 06-07

"...சீர்கெட்ட இஸ்ரவேலே, திரும்பு என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் உங்கள்மேல் என் கோபத்தை இறங்கப்பண்ணுவதில்லை; நான் கிருபையுள்ளவரென்று கர்த்தர் சொல்லுகிறார்;..." (எரேமியா 3:12)

கிறிஸ்துவுக்குள் என் அன்புக்குரிய தேவ பிள்ளைகளே! **இயேசுகிறிஸ்துவின் இணையற்ற இனிய வல்லமையான நாமத்தில் இன்றைய நாளில் "வளம் பெறுக" என வாழ்த்துகின்றேன்.** இன்று அதிகாலையில் நீங்கள் நித்திரை விட்டெழும்புகையில் சோர்வுற்ற நிலையில் காணப்பட்டீர்களா? அது உங்கள் சரீரத்தில் அல்ல உள்ளத்தில் ஏற்பட்டதொன்றே. ஆனாலும் **நீங்கள் கவலைப்படாதிருங்கள்!** ஏனென்றால் **உங்கள் மனச்சோர்வை ஒழித்து உள்ளத்தில் புதிய உற்சாகத்தைத் தர இஸ்ரவேலின் தேவன் இன்றும் எம்மோடிருக்கிறார்.**

தேவ பிள்ளைகளே! எங்கள் ஆவிக்குரிய வாழ்வில் எங்கள் பெலத்தால், சக்தியால், துணிகரத்தினால் இந்த ஆத்மீக பயணத்தில் முன்னோக்கிச் செல்ல முயற்சி செய்திடினும் அவை அனைத்தும் பிரயோஜனமற்றுப் போகும் சந்தர்ப்பங்களே அநேகமாகவிருக்கின்றன. ஏனென்றால் **எமது ஆத்மீக வாழ்க்கை உருக்குலைந்து போகவும், எங்கள் ஜீவ கிரீடத்தை திருடுவதற்கு முயற்சிகளை மேற் கொள்ளுகின்ற சாத்தான் அவனது தந்திரங்களால் எங்கள் உள்ளத்தில் குழப்பத்தை உண்டாக்கி எங்களுக்குள் இருக்கும் தைரியம், பெலன், துணிகரம், என்பவற்றை தணிந்து போகச் செய்து விடுவான்.** அப்பொழுது நாம் சோர்வுற்று போய் விடுவோம். ஆனால் சில வேளைகளில் நாம் தேவ வசனங்களுக்கு கீழ்படியாது போனால் எங்கள் ஆத்துமா பிழையான வழிகளில் செல்லும் போது எங்கள் இஸ்ரவேலின் தேவனாகிய பரலோகப் பிதா எங்கள் மீது தமது கோபத்தை இறங்கப் பண்ணுவார்.

தேவ பிள்ளைகளே! இல்லாவிடின் எமது கிரியைகள் காரணமாக தேவன் கோபப்படும் வேளைகளுமுண்டு. **ஏசாயா 64:7இல் "உங்கள் நாமத்தை நோக்கிக் கூப்பிடுகிறவனும் உம்மைப் பற்றிக் கொள்ளும்படிக்கு விழித்துக் கொள்ளுகிறவனும் இல்லை."** தேவரீர் உம்முடைய முகத்தை எங்களை விட்டு மறைத்து எங்கள் அக்கிரமங்களினிமித்தம் எங்களைக் கரையப் பண்ணுகிறீர் எனக் கூறப்படுகிறது. **அவரின் கோபத்தின் முன்னால் நிற்பவன் யார்?** ஆகையால் **அவருடைய முகத்தை உங்களை விட்டு மறைக்காத வண்ணம் எல்லா வேளையிலும் கீழ்படிந்து அவருக்கு பிரியமானபடி ஜீவிக்க முயற்சி செய்யுங்கள்.** அப்பொழுது நீங்கள் சோர்வடைய மாட்டீர்கள். தேவன் எப்பொழுதும் உங்களோடே கூட இருப்பாராக! **வெற்றிச் சிறந்த நாள்!**

ஜெபம்

பரலோகப் பிதாவே! உங்கள் அளவற்ற அன்புக்காக ஸ்தோத்தரிக்கின்றேன்! என் உள்ளம் சோர்வடையாத வண்ணம் எனக்காக இரங்கும். இன்னும் என் உள்ளத்தை உற்சாகப்படுத்துவாராக! இயேசுகிறிஸ்துவின் நாமத்தில்.

~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அவர்கள் வந்து, சீயோனின் உச்சியிலே கெம்பீரித்து, கர்த்தர் அருளும் கோதுமை, திராட்சரசம், எண்ணெய், ஆட்டுக்குட்டிகள், கன்றுக்குட்டிகள் என்பவைகளாகிய இந்த நன்மைகளுக்காக ஓடிவருவார்கள்; அவர்களுடைய ஆத்துமா நீர்ப்பாய்ச்சலான தோட்டம்போலிருக்கும்; அவர்கள் இனித் தொய்ந்துபோவதில்லை." (எரேமியா 31:12)

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
04 வியாழன்

எங்களின்
சிறையிருப்புகளை
மாற்றி சமீபித்து வர
பிரியமுள்ள தேவன்!

வேதவாசிப்பு
வெளி.
அதி: 08-09

**"அவர்களுடைய பிரபு அவர்களில் ஒருவனாயிருக்க, அவர்களுடைய அதிபதி அவர்கள் நடுவிலிருந்து தோன்றுவார்; அவரைச் சமீபித்து வரப்பண்ணுவேன், அவர் சமீபித்து வருவார், என்னிடத்தில் சேரும்படி தன் இருதயத்தைப் பிணைப்படுத்துகிற இவர் யார்? என்று கர்த்தர் சொல்லுகிறார்."** (எரேமியா 30:21)

பிரியமான தேவ பிள்ளைகளே! **இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தினால் நித்திய ஜீவனை சுவீகரித்துக் கொள்ளும்படியாக ஆயத்தப்படுங்கள் என்று இன்றைய நாளில் வாழ்த்து கூறுகின்றேன்.** எங்கள் இரட்சகர் இயேசுகிறிஸ்துவுக்கூடாக எங்களைத் தெரிந்து கொண்டதாக **பரி.யோவான் 15:16**இல் கூறப்பட்டுள்ளது. இன்றைய நாளிலும் **எரேமியா 30:21**இலும் தேவன் எமக்குக் கூறுவது **"அவரை சேரும்படி பிணைப்பை ஏற்படுத்திக் கொண்டதையே."**

தேவ பிள்ளைகளே! ஏனென்றால் **"அவர்களுடைய பிரபு அவர்களில் ஒருவனாயிருக்க அவர்களுடைய அதிபதி அவர்கள் நடுவிலிருந்து தோன்றுவார். அவரைச் சமீபித்து வரப் பண்ணுவேன். அவர் சமீபித்து வருவார். என்னிடத்தில் சேரும்படி தன் இருதயத்தைப் பிணைப்படுத்துகிற இவர் யார்?"** என்று கர்த்தர் சொல்லுகிறார் என மேலே கூறப்பட்ட பிரதான வசனத்தில் எழுதப்பட்டுள்ளது. தீர்க்கதரிசியான எரேமியாவின் மூலம் தேவன் வெளிப்படுத்துவது **இஸ்ரவேலினதும், யூதாவினதும், சிறையிருப்புக்களைத் திருப்பி அவர்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தேசத்திற்கு வரப் பண்ணுவேன் என்றாகும். அத்தோடு அவர்கள் தேசத்தை சுதந்தரித்துக் கொள்வார்கள்.** அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தரையும் நான் தங்களுக்கு எழுப்பப் போகிற தங்கள் ராஜாவாகிய தாவீதையுமே சேவிப்பார்கள் என்றும் கூறப்படுகிறது. தேவன் தனது ஜனங்கள் மனந்திரும்பி வரும் போது அவர்கள் இவ்வண்ணமாக ஆசீர்வாதங்களைப் பெற்று கர்த்தரின் ஜனங்களாக மேன்மைப்பட்டிருப்பார்கள் என்பதையே அறிந்துக் கொள்ளுங்கள்.

புதிய ஏற்பாட்டின்படி **அவரது ஒரே பேறான மகனுக்கூடாக பரிசுத்த இரத்தத்தினால் எம்மைக் கழுவி நீதிமான்களாக மாற்றி தம்மிடம் அழைத்துக் கொண்ட எமது தேவன் எவ்வளவு அன்புள்ளவராயிருக்கிறார். உலகில் தான் படைத்த அனைத்து உயிரினங்களையும் போசிக்கின்றார். அவ்வண்ணமாகவே ஏற்ற நேரங்களில் அனைத்து காரியங்களையும் நடப்பிக்கின்றார்.** எங்கள் வாழ்விலும் தம்மோடு எம்மை இணைத்துக் கொண்ட தேவன் எத்தனையோ உயர் திட்டங்களை வகுத்து நிறைவேற்றி வருவதை எண்ணிப் பாருங்கள். எதைக் குறித்தும் எண்ணி கலங்காதீர்கள். **ஜெயத்தின் நாள்!**

ஜெபம்

என் சிறையிருப்புகளை மாற்றும் என் இயேசுவே! பாவத்தில் மூழ்கி வாழ்ந்த என்னை இயேசுகிறிஸ்துவுக்கூடாக உம்மண்டையில் அழைத்து நீதிமானாக்கினீர். என்னையும் உங்கள் பிள்ளையாக்கி அரவணைத்துக் காத்து வழி நடத்த வேண்டுமென இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~

வேத வாக்குத்தத்தம்

"அவைகளை எனக்குத் தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார்; அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலும் கூடாது." (பரி.யோவான் 10:29)

ஜீவ மன்னா

ஒகஸ்ட்

05 வெள்ளி

## அக்கிரமங்களை நீங்கலாக்கிச் சுத்திகரித்து மன்னிக்கும் தேவன்!

வேதவாசிப்பு

வெளி. அதி: 10–11

**"அவர்கள் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்த அவர்களுடைய எல்லா அக்கிரமங்களுக்கும் அவர்களை நீங்கலாக்கிச் சுத்திகரித்து, அவர்கள் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து, எனக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணின அவர்களுடைய எல்லா அக்கிரமங்களையும் மன்னிப்பேன்."** (எரேமியா 33:8)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற தேவனாகிய **இயேசுகிறிஸ்துவின் அன்பைப் பெற்று, நித்திய ஜீவனை நோக்கி ஒவ்வொரு நாளும் முன்னோக்கி பயணிக்கும் உங்களை இன்றும் மகிழ்வுடன் வாழ வாழ்த்துகின்றேன்.** எங்கள் சர்வ வல்லமை படைத்த இஸ்ரவேலின் தேவன் எங்கள் மீது வரையறையற்ற அன்பைக் கொண்டவராவார். ஏனென்றால் நாம் நீதிமான்களாக வாழும் பொழுது மாத்திரமல்ல, நாங்கள் எங்கள் அநீதியான காரியங்களினால் தேவனின் தண்டனைக்குரியவர்களாக, துன்பத்தை அநுபவிக்கின்ற வேளையிலும், ஆதரவற்ற நிலையிலும் **தேவன் எம்மை மன்னித்து மீண்டுமாய் அவரிடமாய் சேர்த்து அணைத்துக் கொள்வார்.**

தேவ பிள்ளைகளே! மேலே கூறப்பட்ட **எரேமியா 33:8**இல் எழுதியிருப்பது, **"அவர்கள் எனக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்த அவர்களுடைய எல்லா அக்கிரமங்களுக்கும் அவர்களை நீங்கலாக்கிச் சுத்திகரித்து அவர்கள் எனக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்து, எனக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணின அவர்களுடைய எல்லா அக்கிரமங்களையும் மன்னிப்பேன்"** என்றாகும். ஆனாலும் **ஆத்மீக பிள்ளைகள் முழு உள்ளத்திற்கிணங்க தேவனுக்கு விரோதமாக பாவம் செய்யமாட்டார்கள் என்பதும் துரோகம் செய்யமாட்டார்கள் என்பதும் உண்மையே 1பேதுரு 5:8இல் "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள். விழித்திருங்கள் ஏனெனில் உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கின்ற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித்திரிகிறான்."** என எழுதியிருக்கின்றமையால் ஆவிக்குரிய பிள்ளைகளாகிய எமக்கு விரோதமாக கிரியை செய்து எமது நித்திய ஜீவ கிரீடத்தை திருடுவதற்கு எங்கள் ஆத்மீக வாழ்வை சீர்குலைக்க முனைகின்ற சாத்தான் எம்மால் அறிந்துக் கொள்ள முடியாதபடி எல்லாவித தந்திரமான காரியங்களையும் மேற் கொண்டு மிகவும் சூழ்ச்சிகரமாக எங்களை பாவத்தில் விழவைக்க கிரியைச் செய்வான்.

தேவ பிள்ளைகளே! **அப்படியான சந்தர்ப்பங்களில் நாம் பாவத்தில் வீழ்ந்து விடுவோமாயின் அதைப் பயன்படுத்தி தேவன் முன்பாக குற்றஞ் சுமத்துவான்.** அப்போது தண்டனை அநுபவிக்க நேரிடுகிறது. பாவத்திற்காக மனஸ்தாபப்பட்டு கண்ணீர் விடுகின்ற போது மீண்டுமாக எம்மை சேர்த்துக் கொள்வார். இன்றே மனந்திரும்பி தேவனைப் பற்றிக் கொள்ளுங்கள். **ஆசீர்வாதமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! எனது எல்லா அக்கிரமங்களையும் மன்னிக்கும் தேவனாவீர்கள். இன்றும் நான் சோதனையில் வீழ்ந்து, பாவஞ் செய்தேனாகில் என்னை மன்னியுங்கள். இயேசுவின் நாமத்தில்.

~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"...நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்." (எரேமியா 31:34)

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
06 சனி

நாம் ஆராதிக்கும் தேவன் நம்மைத் தப்புவிக்க வல்லவர்!

வேதவாசிப்பு
வெளி.
அதி: 12-13

"அப்பொழுது நேபுகாத்நேச்சாருக்குக் கடுங்கோபமுண்டு: சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களுக்கு விரோதமாய் அவனுடைய முகம் வேறுபட்டது; சூளையைச் சாதாரணமாய்ச்சூடாக்குவதைப்பார்க்கிலும் ஏழுமடங்கு அதிகமாய்ச் சூடாக்கும்படி உத்தரவு கொடுத்து," (தானியேல் 3:19)

இருந்தவரும், இருக்கிறவரும், வரப்போகிறவருமாகிய **இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் உங்களை வாழ்த்துகின்றேன்.** எங்கள் தேவன் இன்றும் ஜீவிக்கிறவராக இருக்கின்றார். தேவன் அரூபியாக இருக்கின்றாரா? "**நாம் எமது தேவனை விசுவாசிக்கின்றோம் தேவன் தோமா எனும் சீஷரிடம் நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய் காணாதிருந்தும் விசுவாசிக்கின்றவர்கள் பாக்கியவான்கள்**" என **பரி.யோவான் 20:29**இல் எழுதப்பட்டுள்ளது.

தேவ பிள்ளைகளே! "**நேபுகாத்நேச்சார் எனும் ராஜா ஒரு பொற் சிலையைப் பண்ணுவித்து சகல ஜாதி ஜனங்களும் அச்சிலையைப் பணிந்துக் கொள்ளும்படியாகக் கட்டளையிட்டார். எவனாகிலும் தாழ விழுந்து அதைப் பணிந்து கொள்ளாமற் போனால் அவன் அந்நேரமே எரிகிற அக்கினிச் சூளையின் நடுவிலே போடப்படுவான்**" என்றும் கூறப்பட்டது. ஆனால் தேவனின் ஊழியக்காரர்களான **சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ** அந்த பொற்சிலையைப் பணிந்துக் கொள்ளாதபடியினால் எரியும் அக்கினிச் சூளையின் நடுவிலே போடும்படி ராஜா கட்டளைகளைப் பிறப்பித்தார். "**நான் பண்ணி வைத்த பொற்சிலையை நீங்கள் தாழ விழுந்து பணிந்து கொள்ள மறுத்தபடியினால் அந்நேரமே அக்கினிச் சூளையின் நடுவிலே போடப்படுவீர்கள்.**" உங்களை என் கைக்குத் தப்ப வைக்கப் போகிற தேவன் யார் என ராஜா கேட்டார். எங்கள் தேவன் எரிகின்ற **அக்கினிச் சூளையிலும் எம்மைத் தப்புவிக்க நாம் ஆராதிக்கும் தேவன் வல்லவராயிருக்கிறார்.** அப்படியாக அவர் விடுவிக்காமற் போனாலும் நீ நிறுத்தின பொற்சிலையை நாம் பணிந்துக் கொள்ளப் போவதில்லை என்றார்கள்.

தேவ பிள்ளைகளே! அப்பொழுது மேலே கூறப்பட்டுள்ள தேவ வசனத்தின்படி **ராஜா கடுங் கோபமுற்று சூளையை சாதாரணமாய்ச் சூடாக்குவதைப் பார்க்கிலும் ஏழு மடங்கு அதிகமாய்ச் சூடாக்கும்படி உத்தரவிட்டான். சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ** எனும் மூன்று தேவ ஊழியக்காரர்களும் விசுவாசத்தோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள். தேவன் அவர்களது **விசுவாசத்தைப் பார்த்த பிரியமுடன் அக்கினிச் சூளையின் நடுவில் பாதுகாத்தார்.** உங்கள் பிரச்சினைகள் விசாலமாயினும் அவர் மீது அசைக்க முடியாத விசுவாசங் கொண்டு உறுதியாக நில்லுங்கள். இன்றும் **உங்களை தேவன் மீட்டுக் கொள்வார். விடுதலையின் நாள்!**

ஜெபம்

என் இயேசுவே! உங்கள் பேரில் நிலையான விசுவாசத்தோடு இருந்த மூவரையும் நீங்கள் அக்கினிச் சூளையின் நடுவில் எரியாமற் பாதுகாத்தீர்கள். என்னையும் அவ்வாறாக உபத்திரவங்களில் பாதுகாத்துக் கொள்ளுங்கள். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"இதோ, நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர்; என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ?" (எரேமியா 32:27)

ஜீவ மன்னா

ஒகஸ்ட்

07 ஞாயிறு

# தனது நன்மைகளினால் எம்மைத் திருப்தியாக்கும் தேவன்!

வேதவாசிப்பு

வெளி.
அதி: 14–15

**"...என் ஜனங்கள் நான் அளிக்கும் நன்மையினால் திருப்தியாவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்."** (எரேமியா 31:14)

அன்பார்ந்தவர்களே! ஜீவிக்கின்ற தேவன் **இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் உங்களுக்கு இன்றைய நாள் நன்மையான நலமிகு நாளாக வேண்டுமென வாழ்த்துகின்றேன்.** சாதாரணமாக உலக மனிதர்கள் போதுமென்கிற திருப்தியான உள்ளத்தோடு வாழ்வது மிகக் குறைவாக இருக்கின்றது. ஏனென்றால் **உலக மனிதர்கள் மத்தியில் தனக்கு கிடைத்தவைகளையிட்டு மகிழ்ச்சியடைபவர்கள் மிகக் குறைந்தவர்களே.** ஆனாலும் ஆத்மீக பிள்ளைகளான நாம் எமக்கு போதுமென்கிற திருப்தியோடு மகிழ்வுடன் வாழும் உள்ளம் இருப்பின் அது மிகுந்த ஆதாயமாகும்.

தேவ பிள்ளைகளே! **1தீமோத்தேயு 6:6**இல் எழுதியிருப்பது **"போதுமென்கிற மனதுடன் கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம் என்றாகும். ஆகையால் நீங்கள் அப்படியானதொரு உள்ளத்தை தேவனிடம் பெற்றுக் கொள்ளுங்கள்."** தேவ வசனத்தில் **எரேமியா 17:9**இல் எழுதியிருப்பது **"எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது. அதை அறியத்தக்கவன் யார்?"** என்றாகும். உலகில் பெரும்பாலான மனிதர்கள் மற்ற மனிதர்களைப் பார்க்கிலும் தாம் உயர்ந்திருக்க வேண்டுமென்றும் எல்லா மனிதர்களைப் பார்க்கிலும் அனைத்து சம்பத்துக்களையும் பெற்றிருக்க வேண்டுமென்றும் எண்ணுகிறார்கள். அப்பொழுது உள்ளங்களில் போட்டி உருவாகுவதைத் தவிர **மனதில் ஒரு மகிழ்ச்சியான நிலை ஏற்படுவதில்லை. நீங்கள் அப்படியாக ஜீவிக்க வேண்டாம்.**

தேவ பிள்ளைகளே! இன்று முதல் நீங்கள் உங்கள் உள்ளத்தை தேவனுக்கு அர்ப்பணித்து அவரது பரிசுத்த ஆவியானவரால் நிறைந்து வல்லமையைப் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது **போதுமென்கிற திருப்தியான மன மகிழ்ச்சியை தேவன் உங்களுக்கருளுவார்.** எனது இந்த **தனி ஊழியத்தில் 6 வருடங்களாக தேவனே என்னை முன்னோக்கிக் கொண்டு வந்தார்.** தேவ ஊழியத்துக்கென அநேக தொழில் நுட்பக் கருவிகளும் சம்பத்துக்களும் இருப்பினும் எனக்கென்று நான் நிலையான வைப்பு கணக்கு என்று எதையும் வைத்துக் கொள்ளவில்லை. எனது தேவன் ஒவ்வொரு நாளும் தேவைகளை சந்தித்து முன்னோக்கிக் கொண்டு செல்கிறார். **தேவன் எங்கள் வாழ்வில் எம்மைத் திருப்திப்படுத்தி நன்மையான காரியங்களை வாய்க்கப் பண்ணுவாராக! உண்மையான போதுமென்கிற உள்ளத்தைப் பெற்று அநேக ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள். சந்தோஷத்தின் நாள்!**

ஜெபம்

என் இயேசுவே! நீங்கள் நல்லவராகையால் உங்கள் நன்மைகளால் என்னைத் திருப்திபடுத்துகிற தேவனாவீர்கள். இன்றும் என்னை ஆசீர்வதியுங்கள் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில்.

~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"கர்த்தர் ஜாதிகளின் ஆலோசனையை விருதாவாக்கி, ஜனங்களுடைய நினைவுகளை அவமாக்குகிறார்."
(சங்கீதம் 33:10)

ஜீவ மன்னா

ஒகஸ்ட்

08 திங்கள்

## உங்களை வழிகளை அராய்ந்து அறிந்து நடவுங்கள்!

வேதவாசிப்பு

வெளி. அதி: 16–17

**"வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்;..."** (எரேமியா 6:16)

கிறிஸ்துவுக்குள் அருமையான தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற தேவனின் பிரசன்னம் இன்றைய நாளில் உங்களோடு கூடவிருந்து காரியங்கள் அனைத்தையும் நன்மையானவைகளாய் வாய்க்கப்பண்ணுமாறு வாழ்த்துகின்றேன்.** எதிர்கால உலகில் நாம் செல்லுவது சவாலோடு கூடிய அதிவேகமான பயணமாகும். நாம் வேகமாக ஓடிப் போகின்ற பயணத்தில் சற்று நின்று செல்லுமாறேயாகும்.

தேவ பிள்ளைகளே! மேலே கூறப்பட்ட எரேமியா 6:16இல் **"வழிகளிலே நின்று பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து நல்ல வழி எங்கே என்று பார்த்து அதிலே நடவுங்கள் அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்"** என்று கர்த்தர் சொல்லுகிறார். ஏனென்றால் **நாம் வேகமாக முன்னோக்கி பயணிக்கும் போது எங்களையறியாமலே தேவனின் பார்வையில் நாங்கள் வலது பக்கம் அல்லது இடது பக்கம் மீண்டுமாக திரும்பிச் செல்ல இடமுண்டு.** வாழ்வின் குறிக்கோளை நிறைவேற்றும் பொருட்டு எமது உள்ளமானது அதிக ஈடுபாடு உடையதால் எங்களை அறியாமலே தேவனின் பாதையில் தூரமாகிப் போய் விடுவோம். அவைகள் எங்கள் கண்களுக்கு புலப்படாத போதும் **எங்களின் இந்த ஓட்டத்தின் முடிவு எங்கேயென தேவன் நன்கறிவார்.**

தேவ பிள்ளைகளே! இன்று தேவன் எங்களுக்குக் கூறுவது நீங்கள் வழிகளிலே நின்று பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து நல்ல வழி எங்கே என்று பார்த்து நடவுங்கள் என்றேயாகும். **தேவனோடு உங்கள் வாழ்க்கைப் பயணம் ஆரம்பிக்கப்பட்ட வேளை தொடங்கி இது வரை நீங்கள் கடந்து வந்த பாதையில் தீமையான வழிகளில் சென்றிருப்பீர்களாயின் அந்த இடத்திலிருந்து மீண்டுமாக ஆவிக்குரிய பயணத்தை ஆரம்பிக்க முடியும்.** உங்களை அழைத்த தேவன் உங்களுக்கென நியமித்திருக்கும் வழிகளில் நீங்கள் பயணிப்பீர்களாயின் உங்கள் ஆத்துமாவிற்கு ஆறுதல் கிடைக்குமென தேவன் கூறுகிறார். ஆகையால் **நீங்கள் சற்று நின்று உங்கள் வழியை சோதித்தறிந்து பார்த்து மீண்டும் விழிப்புடன் பயணத்தை ஆரம்பியுங்கள். முக்கியமாக உங்கள் வாழ்வில் தேவனோடு கூட ஜெப உறவை பலப்படுத்துவார்.** உங்கள் வாழ்வின் அத்திவாரமாக **ஜெபமும், உபவாசமும்** அமைந்தால் நீங்கள் உண்மையான பாதைகளை ஆராய்ந்தறிந்து செல்ல தேவனின் ஆவியானவர் பரத்தின் ஞானத்தைக் கொடுத்து வழி நடத்துவார். **ஆறுதலின் நாள்!**

ஜெபம்

என் தேவனே! என் வாழ்க்கை பயணத்தில் அதிவேகமாக முன்னோக்கி வந்தேன். ஆனாலும் இன்று சற்று நின்று கடந்து வந்த பாதையை ஆராய்ந்து பார்க்க ஞாபகப்படுத்தியதால் உங்களுக்கு ஸ்தோத்திரம்! இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"என் வாக்குக்குச் செவிகொடுங்கள், அப்பொழுது நான் உங்கள் தேவனாயிருப்பேன், நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்; நான் உங்களுக்குக் கற்பிக்கும் எல்லா வழியிலும், நீங்கள் உங்களுக்கு நன்மையுண்டாகும்படிக்கு நடவுங்கள் என்கிற விசேஷத்தையே அவர்களுக்குச் சொல்லிக் கட்டளையிட்டேன்." (எரேமியா 7:23)

ஜீவ மன்னா

ஒகஸ்ட்

**09** செவ்வாய்

நீங்கள் தேவனின் சொந்த ஆசீர்வதிக்கப்பட்ட ஜனமாயிருக்கிறீர்கள்!

வேதவாசிப்பு

வெளி. அதி: 18-19

**"அக்காலத்திலே இஸ்ரவேல் எகிப்தோடும் அசீரியாவோடும் மூன்றாவதாகப் பூமியின் நடுவில் ஆசீர்வாதமாயிருக்கும்."** (ஏசாயா 19:24)

அன்பான தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்றும் உங்களுக்கு நன்மையான நாளாகுக என உளமார வாழ்த்துகின்றேன். ஏசாயா 45:22**இல் **"பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப் பாருங்கள். அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள் நானே தேவன் வேறொருவரும் இல்லை! என தேவன் இஸ்ராயேல் ஜனங்களுக்கு கூறியிருக்கிறார்."**

தேவ பிள்ளைகளே! பூமியில் அனைத்து ஜாதிகளின் மத்தியில் இஸ்ரவேல் வம்சத்தை தேவன் தனக்குச் சொந்தமான உரிமைப் பெற்ற ஜனங்களாக தேர்ந்தெடுத்ததைப்பற்றி **லேவியராகமம் 20:26**இல் எழுதப்பட்டுள்ளது. **"கர்த்தராகிய நான் பரிசுத்தராயிருக்கிறபடியினாலே நீங்களும் எனக்கேற்ற பரிசுத்தவான்களாயிருப்பீர்களாக, நீங்கள் என்னுடையவர்களாயிருக்கும்படிக்கு உங்களை மற்ற ஜனங்களை விட்டுப் பிரித்தெடுத்தேன்"** என்றாகும். தேவனே இயேசுகிறிஸ்துவுக்கூடாக எங்களை அவரது பிள்ளைகளாக வேறு பிரித்துக் கொண்டமையால் நாங்களும் இப்போது தேவனின் சொந்த பிள்ளைகளாயிருக்கிறோம். **இன்று ஏசாயா 19:24**இல் கூறுவதாவது **"அவருக்கு உரிமையான இஸ்ரவேலரை ஆசீர்வதிக்கப்படுவார்களாக என ஆசீர்வதித்ததையேயாகும். நாம் அவருக்குச் சொந்தமானவர்களாதலால் அந்த ஆசீர்வாதம் எமக்கு கிடைப்பதையிட்டு எவ்வித சந்தேகமுமில்லை."**

தேவ பிள்ளைகளே! தேவனின் வாயிலிருந்து புறப்படும் வசனம் உலகில் வெறுமையாய் தேவனிடத்துக்குத் திரும்புவதில்லை என்பதால் **அவரால் உரிமையாக வேறுபிரிக்கப்பட்ட எங்களையும் இவ்வுலகின் மத்தியில் ஆசீர்வாதமுள்ளவர்களாக்க நினைத்தாராகில் அதை யாருமே மாற்றியமைக்க முடியாது. ஆகையால் உலகில் மற்ற மனிதர்களைப் பார்க்கிலும் உங்கள் வாழ்வானது எல்லா வழிகளிலும், செழிப்பும் நன்மைகளுமே நிறைந்து காணப்படப் போகின்றதென்பது முழு மனதோடு விசுவாசியுங்கள். உங்கள் உள்ளம்** கலங்காதிருப்பதாக! தைரியத்தோடு முன் செல்லுங்கள். **பரலோகத்தின் உரிமைப் பெற்ற சொந்த ஜனங்களாக வேறுபிரித்துக் கொண்ட தேவன் உங்களைக் கைவிடமாட்டார்.**

ஜெபம்

என் பரலோக பிதாவே! இஸ்ரவேலரை உங்கள் சொந்த ஜனமாக தேர்ந்தெடுத்து வேறுபிரித்து ஆசீர்வதித்தீர்கள். என்னையும் இயேசுகிறிஸ்துவுக்குள் அவ்வண்ணமே சொந்தப் பிள்ளையாக தேர்ந்தெடுத்து இப்பூமியில் ஆசீர்வதித்திருப்பதனால் ஸ்தோத்திரம்! இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது." (யாத்திராகமம் 19:5)

ஜீவ மன்னா

ஒகஸ்ட்

**10** புதன்

**நீங்கள் வாக்குத்தத்தத்தின் பிள்ளைகள் என்பதை மறவாதீர்கள்!**

வேதவாசிப்பு

வெளி. அதி: 20-21

**"அதெப்படியென்றால், மாம்சத்தின்படி பிள்ளைகளானவர்கள் தேவனுடைய பிள்ளைகளல்ல, வாக்குத்தத்தத்தின்படி பிள்ளைகளானவர்களே அந்தச் சந்ததி என்றெண்ணப்படுகிறார்கள்."** (ரோமர் 9:8)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்றும் நல்லதொரு நாளை பெற்றுக் கொண்ட உங்களை மனதார வாழ்த்துகின்றேன்.** இயேசுகிறிஸ்துவின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட **நாம் மிகவும் அதிரஷ்டக்காரர்கள்!** ஏனென்றால் நாம் இயேசுகிறிஸ்துவை அறியாதிருந்த போதே அவர் எம்மைத் தேர்ந்தெடுத்து வேறுபிரித்தார்.

தேவ பிள்ளைகளே! **ரோமர் 9:8**இல் கூறப்படுகின்றதாவது **"மாம்சத்தின்படி பிள்ளைகளானவர்கள் தேவனுடைய பிள்ளைகளல்ல வாக்குத்தத்தத்தின்படி பிள்ளைகளானவர்களே அந்தச் சந்ததி என்றெண்ணப்படுகிறார்கள்."** நீங்களும், நானும் பரலோகப் பிதாவின் பிள்ளைகளானது நாம் இஸ்ரவேல் ஜனங்கள் என்றல்ல அத்தோடு நாம் ஆபிரகாமின் சந்ததியுமல்ல. ஆனாலும் விசுவாசத்தின் தந்தையென அழைக்கப்படும் ஆபிரகாமைப் போல் நாமும் விசுவாசத்தின் காரணமாக தேவனின் பிள்ளைகளானோம். மேலே கூறப்பட்ட **ரோமர் 9:8**இல் கூறப்பட்டுள்ளதாவது, **"வாக்குத்தத்தத்தின்படி பிள்ளைகளானவர்கள் அந்தச் சந்ததி என்றெண்ணப்படுகிறார்கள்"** என்றாகும்.

தேவ பிள்ளைகளே! **பரி.யோவான் 1:12**இல் **"அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார் என எங்களை வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளாக வரப்பிரசாதமளித்தார்."** ஆகையால் மனங்கலங்காதீர்கள்! தேவன் ஆபிரகாமிற்கு **"உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நான் தேவனாயிருக்கும்படிக்கு எனக்கும் உனக்கும் உனக்குப் பின் தலை தலை முறையாக வரும் உன் சந்ததிக்கும் நடுவே என் நித்திய உடன்படிக்கையை நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன் என பொருத்தனை பண்ணியுள்ளார்."** இயேசுகிறிஸ்துவுக்கூடாக நீங்கள் தேவ பிள்ளையானது தேவனின் உடன்படிக்கையின் வசனத்தினாலாகும். அப்படியானால் நீங்கள் தேவனின் வாக்குத்தத்தத்தின் பிள்ளைகள், தேவ சந்ததி என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஆகையினாலேயே நாம் உலகில் உயர்ந்த இடத்தை வகிக்கின்றோம். நீங்களும் அவ்வண்ணமே **வெற்றிச் சிறந்த நாள்!**

**ஜெபம்**

என் இயேசுவே! நீங்கள் என்னை சொந்தப் பிள்ளையாக்கிக் கொண்டது உங்கள் வாக்குத்தத்தத்திற் கூடாகவே. ஆகையால் உங்கள் சந்ததியாவேன். உங்கள் எல்லா வாக்குத்தத்தங்களையும் எனக்கூடாக நிறைவேற்றுங்கள். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"அவர்கள் சந்ததியானது ஜாதிகளின் நடுவிலும், அவர்கள் சந்தானமானது ஜனங்களின் நடுவிலும் அறியப்பட்டிருக்கும்; அவர்களைப் பார்க்கிற யாவரும் அவர்கள் கர்த்தரால் ஆசீர்வாதம் பெற்ற சந்ததியென்று அறிந்துகொள்வார்கள்." (ஏசாயா 61:9)

ஜீவ மன்னா

ஒகஸ்ட்

11 வியாழன்

# சத்துருக்களிடமிருந்து உங்களை மீட்கும் தேவன்!

வேதவாசிப்பு

வெளி. 22
ஆதியாகமம் 01

**"என்னிலும் அதிக பலவான்களாயிருந்த என் பலத்த சத்துருவுக்கும் என்னைப் பகைக்கிறவர்களுக்கும் என்னை விடுவித்தார்."** (சங்கீதம் 18:17)

அருமையான தேவ பிள்ளைகளே! **ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் நீங்கள் இன்றைய நாளில் காரியங்களில் வெற்றி பெற வேண்டுமென வாழ்த்துகின்றேன்.** உங்கள் வாழ் நாள் முழுவதும் உங்களோடிருந்து எல்லா சத்துருக்களிடமிருந்தும் உங்களை மீட்டுக் கொள்வேன் என பொருத்தனை பண்ணிய தேவன் இன்றும் உங்களோடு இருக்கின்றார். ஆகையால் **உள்ளம் கலங்காதிருங்கள்!**

தேவ பிள்ளைகளே! **உலக மனிதர்கள் ஒருவருக்கொருவர் விரோதமாக எழும்பும் சந்தர்ப்பங்கள் அநேகமாயிருக்கின்றன.** ஏனென்றால் எதிர்கால சமுதாயத்தில் இடம் பெறுவது போட்டியான செயல்களே என்பதால் ஒருவருக்கு மேலாக இன்னுமொருவர் முதலிடத்தைப் பெற அதிகமாக முயற்சி செய்வார்கள். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் சில வேளைகளில் **எவ்வழியிலாவது தமது நோக்கத்தை நிறைவேற்ற முயற்சி செய்வார்கள்.** இன்னுமாக தனக்கு மேலாக இன்னுமொருவர் உலகில் உயர்வாக வாழ்வதை காணும் போது அதற்கு பொறாமைக் கொண்டு கோபப்பட்டு அவர்களுக்கு விரோதமாக பல வித அக்கிரமங்களை இழைத்து இவ்வாறான காரணங்களில் மாத்திரமல்ல, **மனிதனது வசனங்களினால் மனதைக் காயப்படுத்தி, அவர்கள் மேல் வைராக்கியங் கொண்டு அவர்களை பழி வாங்குவதற்கு இரகசியமான செயல்களை செய்வோரும் உலகில் பெரும்பாலாகக் காணப்படுகின்றார்கள்.**

தேவ பிள்ளைகளே! இவ்வாறான **பில்லி, சூனிய, மாந்திரீக கட்டுக்கள் காரணமாக வேதனையோடு வாழ்கின்ற மனிதர்கள் அநேகருண்டு.** ஏனென்றால் எங்கள் தேவ சபையில் நடக்கின்ற அற்புத சுகமளிக்கும் ஆராதனைகளில் **இப்படியான கட்டுகளின் காரணமாக சிறுமைப்பட்டு, நெருக்கப்பட்டு, வேதனைப்பட்டு பெரும்பாலான மனிதர்கள் விடுதலை பெற்று சாட்சி கூறுவதை நாங்கள் நேரடியாகக் எம் கண்களில் காண்கிறோம்.** தாவீது ராஜா என்னிலும் அதிக பலவான்களாயிருந்த என் பலத்த சத்துருவுக்கும் என்னைப் பகைக்கிறவர்களுக்கும் என்னை விடுவித்தார் என்பதாக **சங்கீதம் 18:17**இல் கூறுகின்றார். **"நீங்கள் தேவனுக்குள் நிலையாக நிற்பீர்களெனின் அசுத்த வல்லமைகளிடமிருந்து மாத்திரமல்ல, சத்துருக்களிடமிருந்தும் மீட்டுக் கொள்வார்." ஜெயத்தின் நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! நான் சத்துருவின் கரங்களிலும் என் மேல் கடுங் கோபம் கொண்டவர்களிடமும் என்னைக் காத்துக் கொண்டதால் ஸ்தோத்திரம்! நான் பலவீனமானவராக இருப்பினும் என்னைப் பெலப்படுத்துவதால் நன்றி! இன்னுமாக பெலப்படுத்தி ஆசீர்வதிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"உனக்கு விரோதமாய் எழும்பும் உன் சத்துருக்களைக் கர்த்தர் உனக்கு முன்பாக முறிய அடிக்கப்படும்படி ஒப்புக்கொடுப்பார்; ஒரு வழியாய் உனக்கு எதிராகப் புறப்பட்டு வருவார்கள்; ஏழு வழியாய் உனக்கு முன்பாக ஓடிப்போவார்கள்." (உபாகமம் 28:7)

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
12 வெள்ளி

நேற்றும் இன்றும்
சதாகாலமும் மாறாத
தேவன் உங்களோடு!

வேதவாசிப்பு
ஆதியாகமம்
அதி: 02-03

**"பூமியானது புல்லையும், விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், பூமியின்மேல் தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைத் தங்கள் தங்கள் ஜாதியின்படியே கொடுக்கும் கனிவிருட்சங்களையும் முளைப்பிக்கக்கடவது என்றார்: அது அப்படியே ஆயிற்று."** (ஆதியாகமம் 1:11)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! **ஜீவனுள்ள நம் தேவனாகிய இயேசுகிறிஸ்து இன்றைய நாளில், நீங்கள் நினைப்பதற்கும், விண்ணப்பிதற்கும் மேலதிகமான ஈவுகளைக் கொடுக்கும்படியாக வாழ்த்துகின்றேன்.** நம்மை சிருஷ்டித்த தேவன் ஒரு நாளும் மாறாதவராக, என்றுமே மாறாத அன்பை உடையவராக இருக்கின்றார். நாமும் **தேவனை முழு உள்ளத்தோடு எப்போதும் நேசிப்போமானால் தேவனின் அன்பிலிருந்து யாராலும் பிரிக்கவோ, தூரமாக்கவோ முடியாது.**

தேவ பிள்ளைகளே! எம்மைச் சிருஷ்டித்த தேவன் நித்திய தேவனாவார். ஏனென்றால் தேவன் எமக்குக் கூறுவது **"அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன் ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக் கொள்கிறேன்"** என்றாகும். **(எரேமியா 31:3)** ஆகையால் **ஆதியாகமம் 1:11**இல் எழுதியிருப்பது **"பூமியானது புல்லையும், விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும் பூமியின் மேல் தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைத் தங்கள் தங்கள் ஜாதியின்படியே கொடுக்கும் கனி விருட்சங்களையும் முளைப்பிக்கக்கடவது"** என்றே. விசேடமாக விருட்சங்களின் விதைகள், கீரைவகைகளின் விதைகள் என்பனவைகளை இப்பூமியில் விதைப்போமாகில் ஏற்ற காலம் வரும் போது அது பலன் கொடுக்கும். அது **8000 வருடங்களுக்கு முன்னர் எம்மை சிருஷ்டித்த தேவனால் நியமிக்கப்பட்டதாகும்.**

தேவ பிள்ளைகளே! இன்றும் அப்படியாக இயற்கையைக் குறித்து தேவன் நியமித்த திட்டங்கள் இப்பூமியில் நிறைவேறுவதை நாம் காண்கிறோம். தேவன் வாயிலிருந்து புறப்பட்ட வசனங்கள் இன்றும் உலகில் மாறாது நிறைவேறுகிறது. **தேவனின் அன்பு அத்தோடு எங்களுக்குக் காட்டும் தயவு. இரக்கம், கருணை மாறிப் போய் விடுமென்று நினைக்கின்றீர்களா? தேவன் நேற்றும், ஈன்றும், என்றுமே மாறாத தேவன் என்பதால் அவர் இன்றும் உங்களோடிருந்து உங்களை ஆசீர்வதிக்கின்றார். வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் இயேசுவே! நித்திய தேவன் என்பதில் இன்றும் நீங்கள் மாறாதவராக இருக்கின்றீர்கள். நீங்கள் நியமித்திருக்கிறதன் பிரகாரம் என்னை ஆசீர்வதியுங்கள் இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்.
~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"உன் சிருஷ்டிகரே உன் நாயகர்; சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம், இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் மீட்பர், அவர் சர்வபூமியின் தேவன் என்னப்படுவார்." (ஏசாயா 54:5)

ஜீவ மன்னா

ஒகஸ்ட்

**13** சனி

கர்த்தரை நம்புகிறவர்கள் உயர்ந்த ஸ்தலங்களில் வாசம் பண்ணுவார்கள்!

வேதவாசிப்பு

ஆதியாகமம் அதி: 04-05

**“கர்த்தரை நம்புகிறவர்கள் என்றென்றைக்கும் அசையாமல் நிலைத்திருக்கும் சீயோன் பர்வதத்தைப்போல் இருப்பார்கள்.”** (சங்கீதம் 125:1)

என் அருமையான தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் தாயினும் மேலாக எம்மேல் அன்பு வைத்து எம்மை வழி நடத்தும் தேவன் இன்றைய நாளில் தம் அன்பினால் உங்களை வழி நடத்தும்படியாக வாழ்த்துகின்றேன்.** எங்கள் தேவன் மனிதனைத் தவிர மற்ற அனைத்தையும் தன் வாயின் வல்லமையான வார்த்தைகளிலே உருவாக்கினார். மனிதனை மாத்திரம் அவரின் கரங்களால் உருவாக்கினார். தேவன் எம்மிடம் எதிர்பார்ப்பது நாம் தேவனை நேசித்து **அவரது வசனத்தின்படி ஜீவிக்க வேண்டுமென்பதை மாத்திரமே.** அதைத் தவிர வேறு எந்த எதிர்பார்ப்பும் எம்மைக் குறித்து தேவனிடம் இல்லை.

தேவ பிள்ளைகளே! நாங்கள் பெரும்பாலான பழக்கப்பட்டிருப்பது நாம் கண்களால் காணும் மனிதர்கள் பேரில் நம்பிக்கை கொள்வதையே யாகும். **எங்கள் பெற்றோர்கள் சகோதர, சகோதரர்கள், பிள்ளைகள் கணவன், மனைவி அயலவர்கள், நண்பர்கள் என்பவர்களை நாம் மிகவும் நம்புகின்றோம்.** அவர்கள் பேரில் வைக்கும் நம்பிக்கை தேவனிடம் வைப்பதில்லை. அது மிகவும் கவலைக்குரியதாகும். ஏனென்றால் தேவ வசனங் கூறுவது **ஏசாயா 2:22**இல் “**நாசியிலே சுவாசமுள்ள மனுஷனை நம்புவதை விட்டு விடுங்கள். எண்ணப்படுவதற்கு அவன் எம்மாத்திரம்**” என்றாகும்.

தேவ பிள்ளைகளே! **மனிதன் ஒரு நொடிப் பொழுதில் மாறி விடுவான் ஆகையால் அவன் பேரில் நம்பிக்கை கொண்டுள்ள மனிதன் எவ்வேளையில் பிரச்சினைக்குள்ளாவான்? சிறுமைப்படுவான்? என்பதை நாம் அறியோம்.** இப்படியாக உலக மனிதர்கள் பேரில் தன் நம்பிக்கையை வைத்து வாழ்வோருக்கு இறுதியில் நடைபெறுவது அனைத்து எதிர்பார்ப்புகளையும் இழந்து சிறுமைப்பட்டு தன்னைச் சிருஷ்டித்த தேவனிடம் மனந்திரும்பி வருவதேயாகும். ஆகையால் நீங்கள் அவ்வண்ணமாக இராமல் **முதன் முதலே தேவன் பேரில் நம்பிக்கையாயிருங்கள். “கர்த்தரை நம்புகிறவர்கள் என்றென்றைக்கும் அசையாத சீயோன் பர்வதத்தைப் போலிருப்பார்கள்”** என இன்றைய தேவ வசனத்தில் எழுதப்பட்டிருக்கிறது. நீங்களும் தேவனுக்குள் பெலனான வாழ்வை அமைத்துக் கொள்ளுங்கள். **எங்கள் ஜீவ மன்னா தினமஞ்சரியை வாசிப்பீர்களென்றால் ஆசீர்வாதங்களைப் பெறுவீர்கள் என்பதில் சந்தேகமில்லை. வெற்றிச் சிறந்த நாள்!**

ஜெபம்

என் தேவனே! மனிதன் பேரில் நம்பிக்கை வைப்பவரின் வாழ்வு இடைவழியில் நிலையற்று போய் விடும். ஆனாலும் உங்கள் பேரில் விசுவாசம் வைப்பவர்களை நீங்கள் பெலப்படுத்தி உயர்த்துவதால் ஸ்தோத்திரம்! இயேசுகிறிஸ்துவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

“அப்பொழுது இயேசு சத்தமிட்டு: என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் என்னிடத்தில் அல்ல, என்னை அனுப்பினவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறான்.”
(பரி.யோவான் 12:44)

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
14 ஞாயிறு

**தேவனுடைய பலத்த கரம்
உங்கள் சிரசின்
மேல் தங்குவதாக!**

வேதவாசிப்பு
ஆதியாகமம்
அதி: 06-07

**"நீங்கள் அதைக் காணும்போது, உங்கள் இருதயம் மகிழ்ந்து, உங்கள் எலும்புகள் பசும்புல்லைப்போலச் செழிக்கும்; அப்பொழுது கர்த்தருடைய ஊழியக்காரரிடத்தில் அவருடைய கரமும், அவருடைய சத்துருக்களிடத்தில் அவருடைய சினமும் அறியப்படும்."** (ஏசாயா 66:14)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் "கர்த்தரை தெய்வமாகக் கொண்டிருக்கும் நீங்கள் பாக்கியவான்கள்** என **இன்றைய நாளில் வாழ்த்துகின்றேன்.** எங்களைச் சிருஷ்டித்த தேவன் எப்போதும் எமக்கு ஒத்தாசை செய்துக் கொண்டிருக்கிறார். எமக்குத் துணையாக இருக்கின்றார். இன்றும் உங்கள் வாழ்வில் இருக்கின்ற **அனைத்து காரியங்களையும் தேவனுக்கு அர்ப்பணித்து தேவன் உங்களுக்கு அவை அனைத்தையும் நிறைவேற்றித் தருவார் என விசுவாசத்துடன் இன்றைய நாளை ஆரம்பியுங்கள்.**

தேவ பிள்ளைகளே! இன்றைய நாளில் பிரதான வேதாகம வசனத்தில் குறிப்பிடப்படுகின்றதாவது, **"கர்த்தருடைய ஊழியக்காரரிடத்தில் அவருடைய கரமும், அவருடைய சத்துருக்களிடத்தில் அவருடைய சினமும் அறியப்படும்."** இங்கே கர்த்தருடைய ஊழியக்காரர்கள் என்பது தேவ ஊழியத்தில் ஈடுபட்டிருப்பவர்களைக் குறித்தே. ஆனாலும் **நீங்கள் கலங்காதிருங்கள்!** ஏனென்றால் தேவன் வெளிப்படுவது அவரது இராஜ்யத்திற்காக தம்மை அர்ப்பணித்து ஊழியம் செய்பவர்க்கு மாத்திரம் எங்களுக்கு இல்லையே என நினைக்காதீர்கள். **ஏனென்றால் நீங்கள் தேவனைக் குறித்து அறிந்துக் கொண்டீர்களாயின் நீங்கள் பெற்ற வரப்பிரசாதத்தை உலகில் மற்ற மனிதர்களும் பெற்றுக் கொள்ளும்படியாக அவர்களுக்கும் தேவனைக் குறித்து வெளிப்படுத்த வேண்டும். ஒவ்வொருவருக்கும் நற்செய்தி கூறுவது எங்கள் அனைவரதும் தலையாய கடமை என்பதால் வெளிப்படுத்தல் 1:6**இல் எழுதியுள்ளவாறு **"நாங்கள் அனைவரும் தேவனின் ஆசாரியர்களாவோம்."**

தேவ பிள்ளைகளே! இன்னுமாக தேவன் தனது சத்துருக்களுக்கு விரோதமாக சினம் கொள்வார் என எழுதப்பட்டுள்ளது. ஏனென்றால் **எங்களுக்கு விரோதியான சாத்தான் தேவனுக்கும் எதிராளியாவான்.** ஏனென்றால் எங்கள் எதிராளியான சாத்தானே என தேவ வசனம் கூறுகின்றது. தேவன் எம்மை அளவற்று நேசிப்பதனால் **எங்களுக்கு விரோதமாக செயல்படுபவர்களுக்கு விரோதமாக அவரும் செயல்படுவார்.** ஆகையால் இன்றைய நாளில் **தேவனின் வல்லமையான கரம் உங்கள் கரத்தை பிடித்துக் கொண்டிருப்பதை நினைத்து புதிய பெலனைப் பெற்றுக் கொள்ளுங்கள். ஆசீர்வாதமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! உங்கள் வல்லமையான கரத்தை என் பேரில் வைத்திருப்பதால் ஸ்தோத்திரம்! நீங்கள் என்னில் அற்புத காரியங்களை, வல்லமையான காரியங்களை நிகழ்த்துவீர்களாக.
இயேசுகிறிஸ்துவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"நாள் உண்டாகாததற்குமுன்னும் நானே இருக்கிறேன்; என் கைக்குத் தப்புவிக்கத்தக்கவன் இல்லை; நான் செய்கிறதைத் தடுப்பவன் யார்?" (ஏசாயா 43:13)

ஜீவ மன்னா

ஒகஸ்ட்

15 திங்கள்

**இரவும் பகலும் உறங்காது உங்களைக் காக்கிற இஸ்ரவேலின் தேவன்!**

வேதவாசிப்பு

ஆதியாகமம்
அதி: 08-09

**"இதோ, இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை தூங்குகிறதுமில்லை."**
(சங்கீதம் 121:4)

அருமையான தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் உலகம் தர முடியாத சமாதானத்தை நீங்கள் பெற்றுக் கொண்டீர்கள் என உங்களை உளமார வாழ்த்துகின்றேன்.** எங்கள் தேவன் அவரது கண்களின் கருமணியைப் போல் எங்களை பாதுகாக்கின்றனர். ஏனென்றால் **சகரியா 2:8**இல் **"உங்களைத் தொடுகிறவர் அவருடைய கண்மணியைத் தொடுகிறார்."** என எழுதப்பட்டுள்ளது. ஆகையால் மனங்கலங்காதீர்கள்!

தேவ பிள்ளைகளே! மேலே கூறப்பட்ட **சங்கீதம் 121:4**இல் எழுதியிருப்பது **"இதோ இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை, தூங்குகிறதமில்லை"** என்றாகும். அதன் விளக்கம் என்னவென்றால் தேவன் உறங்காமல் எங்களை பாதுகாக்கிறார் என்றாகும். நாம் அனைவரும் இரவு முழுவதும் நன்றாக சுகமாக நித்திரை செய்கின்றோம். ஆனால் தேவன் எங்களுக்குக் காட்டுகின்ற அளவற்ற அன்பின் நிமித்தம் இரவு நேரத்தில் எந்தவித ஆபத்தோ தீமையோ இடம் பெறச் செய்வதில்லை. **கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னதாக வெள்ளம் காரணமாக மனிதர்கள் நினையாத வேளையில் பாரிய விபத்திற்கு முகங் கொடுக்க நேரிட்டது.** கடந்த தினமொன்றில் எங்கள் தேவ சபைக்கு வந்திருந்த ஒரு சகோதரி **அவர் பாலத்துறை எனும் பிரதேசத்தில் வசிப்பதாகவும் அன்றைய நாளில் அவரும் அவருடைய குடும்பத்தில் அனைவரும் இரவில் சுகமாக உறங்கும் வேளையில் வெள்ளம் வந்ததைக் குறித்துக் கூறினார்.** ஆனாலும் ஒரு குரல் கேட்டு அந்த அசையா நித்திரையிலிருந்து விழித்தெழுந்ததாகவும், அவ்வேளையில் யாருமே அவர் கண்களுக்கு தென்படவில்லை என்றும், காண முடிந்தது. **அவர்கள் உறங்கிக் கொண்டிருந்த கட்டில்மட்டத்திற்கு வீட்டில் வெள்ளம் நிறைந்திருந்ததை மாத்திரமே என்றும் கூறினார்.**

தேவ பிள்ளைகளே! **அதன் பிறகு வீட்டில் அனைவரும் விழித்து வெளியேறி வேறிடத்திற்குச் சென்றதாகவும் கூறினார்.** அவர் எனது தேவன் என்னை அழைத்து எழுப்பியிருக்கா விட்டால் வெள்ளத்தில் மூழ்கி நாம் அனைவரும் மரித்திருக்கலாம் என்றே. தேவனை ஏற்றுக் கொள்கின்ற, **தேவனை விசுவாசிக்கின்ற அனைவரையும் இப்படியாக தேவன் காப்பாற்றுகின்றார். நீங்களும் தேவனை விசுவாசியுங்கள். தேவன் பகலில் மாத்திரமல்ல இரவு முழுவதும் உங்களைப் பாதுகாத்துக் கொள்வார். வெற்றிச் சிறந்த நாள்!**

ஜெபம்

எங்களை அயராது கண்மணி போல் காக்கும் தேவனே! நீங்கள் நாள் முழுவதும் என்னையும் எனது முழுக் குடும்பத்தையும் பாதுகாக்கின்றபடியால் ஸ்தோத்திரம்! இனிமேலும் சத்துரு எம்மை மேற்கொள்ளாத வண்ணம் காத்தருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத பாக்குத்தத்தம்

"பகலிலே வெயிலாகிலும், இரவிலே நிலவாகிலும் உன்னைச் சேதப்படுத்துவதில்லை." (சங்கீதம் 121:6)

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
16 செவ்வாய்

**கர்த்தர் தனது ஜனங்களை எச்சரிக்கை செய்கிறார்!**

வேதவாசிப்பு
ஆதியாகமம்
அதி: 10-11

**"அவர்களை நோக்கி: உங்கள் தகப்பனுடைய முகம் நேற்று முந்தைநாள் இருந்ததுபோல இருக்கவில்லை என்று எனக்குத் தோன்றுகிறது ஆனாலும் என் தகப்பனுடைய தேவன் என்னோடேகூட இருக்கிறார்."** (ஆதியாகமம் 31:5)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜிவிக்கின்ற தேவனாகிய **இயேசுகிறிஸ்துவின் நாமத்தின் வல்லமையால் நீங்கள் பெற்றுக் கொண்ட இன்றைய நாளும் நல்ல நாளாகும்படியாக என வாழ்த்துகின்றேன்.** இஸ்ரவேலின் தேவனால் தெரிந்துக் கொள்ளப்பட்டவர்களும் அவரால் நேசிக்கப்படுகிறவர்கள் மீது அவரது அவதானம் மிக விஷேசித்ததாய் இருக்கிறது ஆகையால் **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!**

அன்பான தேவ பிள்ளைகளே! யாக்கோபு இஸ்ரவேலின் தேவனால் தெரிந்துக் கொள்ளப்பட்டவனாவான். ஏனெனில் ஆபிரகாமிற்கு அவரால் கொடுக்கப்பட்ட **"நீ திரளான ஜாதிகளுக்குத் தகப்பனவாய் என்ற உடன்படிக்கையின்படி ஆபிரகாமின் புத்திரன் ஈசாக்கின் புத்திரனாகிய யாக்கோபின் மூலமாக இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களை உருவாக்கும்படியாகவே அவர் யாக்கோபை தெரிந்துக் கொண்டார்."** ஆயினும் யாக்கோபு தன் தாயாகிய ரெபெக்காளின் சகோதரன் லாபான் வீட்டில் ஆரான் என்னும் ஊரிலே போய் வாழ்ந்தான். பிறகு லாபானின் குமாரத்திகளை விவாகம் செய்துக் கொண்டான். வெகு காலங்களுக்கு பிறகு யாக்கோபு தன் சொந்த தேசம் செல்லும்படியாக லாபானிடம் அனுமதி கேட்டான். இதனால் லாபானுடைய முகம் வேறுபட்டது இதைக் குறித்து யாக்கோபு தன் மனைவிகளை அழைத்து உங்கள் தகப்பனுடைய தேவன் என்னோடேகூட இருக்கிறார் என்று கூறினான்.

தேவ பிள்ளைகளே! இதன் பின் சில நாட்கள் கடந்து லாபானுக்கு அறிவிக்காமல் தனக்குச் சொந்தமான யாவற்றையும் எடுத்துக் கொண்டு ஓடிப் போனான். இதையறிந்த லாபான் தன் சகோதரரோடு கூட அவனைத் தொடர்ந்து தேடிப் போனான். **அன்று இரவு இஸ்ரவேலின் தேவன் லாபானுடைய சொப்பனத்தில் தோன்றி நீ யாக்கோபோடே நன்மையே அன்றித் தீமை ஒன்றும் பேசாதபடிக்கு எச்சரிக்கையாயிரு என்றார்.** அதன்படி லாபான் யாக்கோபை கண்டு பிடித்த போது அவனை நோக்கி உங்களுக்கு பொல்லாப்பு செய்ய எனக்கு வல்லமை உண்டு ஆகிலும் **உங்கள் தகப்பனுடைய தேவன் யாக்கோபோடே நன்மையை அன்றித் தீமை ஒன்றும் பேசாதபடிக்கு எச்சரிக்கையாயிரு** என்று கூறினார். இஸ்ரவேலரின் தேவன் இன்றும் அவ்வாறே உங்கள் பட்சத்தில் இருக்கிறார். **மனமகிழ்ச்சியின் நாள்!**

ஜெபம்

மகா பரிசுத்தமுள்ள தேவனே! யாக்கோபை போலவே என்னையும் உங்கள் பிள்ளையாக தெரிந்துக் கொண்டபடியால் நன்றி! நீங்கள் எப்போதும் என்னோடிருந்து என்னை வழி நடத்தி ஆசீர்வதிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அப்பொழுது, மெய்யாய் நீதிமானுக்குப்பலன் உண்டென்றும், மெய்யாய் பூமியிலே நியாயஞ்செய்கிற தேவன் உண்டென்றும் மனுஷன் சொல்லுவான்." (சங்கீதம் 58:11)

ஜீவ மன்னா

ஒகஸ்ட்

17 புதன்

**பயப்படாது விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்!**

வேதவாசிப்பு

ஆதியாகமம்
அதி: 12-13

**"அவர்கள் சொன்ன வார்த்தையை இயேசு கேட்டவுடனே, ஜெபஆலயத்தலைவனை நோக்கி: பயப்படாதே, விசுவாசமுள்ளவனாயிரு என்று சொல்லி;"** (பரி.மாற்கு 5:36)

தேவனுக்குள் பிரியமான தேவ பிள்ளைகளே! **ஜீவனுள்ளவரும் தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு எம்மை அழைத்த இயேசு தேவனின் நாமத்தின் வல்லமையினால் இன்றும் ஆசீர்வாதமான நாளாக விளங்குவதாக என வாழ்த்துகின்றேன்.** எம் அன்றாட ஜீவியத்திலே வித்தியாசமான காரியங்களின் நிமித்தம் பாடுபடுகிறவர்களாய் இருக்கிறோம். இதில் பெரும்பாலானவைகள் எம் சுயதேவைகளாகும். ஆயினும் நாம் பிரயாசைப்படும் அளவிற்கு பலன் கிடைக்காத சந்தர்ப்பங்கள் அநேகமாயிருக்கிறன.

தேவ பிள்ளைகளே! **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக! "யவீரு என்னும் ஜெப ஆலயத் தலைவன் இயேசுவின் பாதத்தில் விழுந்து என் குமாரத்தி மரண அவஸ்தைப்படுகிறாள்."** அவள் ஆரோக்கியம் அடையும்படிக்கு நீர் வந்து அவள் மேல் கைகளை வையும் அப்பொழுது பிழைப்பாள் என்று அவரை மிகவும் வேண்டிக் கொண்டான். அவர் அவனோடே கூடப் போனார். சிறிது தூரம் கடந்து போய்க் கொண்டிருக்கும் வேளையில் அவன் வீட்டிலிருந்து சிலர் வந்து உம்முடைய குமாரத்தி மரித்துப் போனாள், இனி ஏன் போதகரை வருத்தப்படுத்துகிறீர் என்றார்கள். அவர்கள் சொன்ன வார்த்தையை **"இயேசு கேட்டவுடனே ஆலயத் தலைவனை நோக்கி பயப்படாதே விசுவாசமுள்ளவனாயிரு"** என்று கூறினார்.

தேவ பிள்ளைகளே! **"இயேசுகிறிஸ்து யவீருடன் அவன் வீட்டிலே பிரவேசித்து பிள்ளையின் கையைப் பிடித்து சிறு பெண்ணே எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன்"** என்றார். உடனே சிறு பெண் எழுந்து நடந்தாள். அவள் பன்னிரெண்டு வயதுள்ளவளாயிருந்தாள். இன்றும் ஆண்டவர் அவ்வாறே செயல்படுகிறவராய் இருக்கிறார். **உங்கள் வாழ்க்கையில் வியாதி, துன்பம், வறுமை. இன்னல்கள் குடும்பத்தில் பிரச்சினைகள், பிசாசின் கட்டுகள், பில்லி சூனியம் போன்றவற்றால் வாழ்விலே விரக்தியுற்று விழுந்து போனவராய் இருக்கிறீர்களா?** முன்னேற முடியவில்லையா? **இயேசுகிறிஸ்துவை முழு இருதயத்துடன் விசுவாசியுங்கள்.** இன்றும் உங்கள் கரங்களைப் பிடித்து நிற்கச் செய்து மறுபடியும் உங்கள் வாழ்க்கைப் பயணத்தை வெற்றியுடன் முன்னோக்கி நடத்திச் செல்ல கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஒத்தாசை புரிவார். ஆகையால் இன்றைய நாளிலும் நீங்கள் பயப்படாமல் தைரியமாயிருங்கள். **வெற்றி நிச்சயம். ஜெயம் தரும் நாள்!**

ஜெபம்

கிருபை நிறைந்த இயேசுவே! உங்கள் வார்த்தைகளைக் கொண்டு என் விசுவாசத்தை பெருகச் செய்தபடியால் நன்றி! எதைக் குறித்தும் பயப்படாமல் விசுவாசத்தோடிருந்து வாழ்விலே ஜெயத்தைப் பெற்றுக் கொள்ள தயை கூர்ந்தருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத

"நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை." (யாக்கோபு 1:17)

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
18 வியாழன்

வறட்சியான
எம் ஆத்துமாவை
திருப்தியாக்கும் தேவன்!

வேதவாசிப்பு
ஆதியாகமம்
அதி: 14-15

**"கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி, மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார்;..."**
(ஏசாயா 58:11)

கர்த்தருக்குள் பிரியமான என் தேவ பிள்ளைகளே! நித்தமும் எம்மை சத்தியத்திலே வழி நடத்தும் **ஜீவனுள்ள தேவன் கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் இன்று சுபமே என வாழ்த்துகின்றேன்.** சாவ வல்லமையின் சிருஷ்டிகரான கர்த்தர் தம் கரத்தின் படைப்பாகிய மனிதனை அளவில்லாமல் நேசிக்கிறார். அவரது இந்த அன்பு ஒரு போதும் மாறாத அன்பாகும் ஆகையால் **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!**

அன்பான தேவ பிள்ளைகளே! மனிதனுடைய செயல்திறமைகளுக்கு ஓர் வரையறை உண்டென்பதை நாம் அறிவோம். அந்த வரையறையிலும் **எம்மால் நினைத்துப் பார்க்க முடியாத செயல்கள் திறமைகளாக வெளிப்படுகிறது.** இருந்த போதிலும் மனிதனால் செய்ய முடியாத காரியங்கள் பல உள்ளன. உதாரணமாக மரணத்தை எம்மால் தடுக்க முடியாது. வேத வசனத்தில் இப்படி குறிப்பிடப்பட்டுள்ளது **பிரசங்கி 8:8இல் "ஆவியை விடாதிருக்கிறதற்கு ஆவியின் மேல் ஒரு மனுஷனுக்கும் அதிகாரமில்லை மரண நாளின் மேலும் அவனுக்கு அதிகாரமில்லை. அந்தப் போருக்கு நீங்கிப் போவதுமில்லை"** என்பதாக. ஆயினும் மரணத்தை ஜெயம் கொண்டு உயிர்த்தெழுந்தவரான எம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இன்றும் ஜீவனுடன் எம்மோடிருக்கிறார். இன்றைய பிரதான வேத வசனத்தில் "**கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார்**" என்பதாக.

தேவ பிள்ளைகளே! **நாம் வறண்ட நிலத்திலோ, பாலை வனத்திலோ பயணம் செய்யும் போது நீரற்ற, உஷ்ணமான நிலையில் எம் சரீரம் சோர்ந்து துவண்டு போகும். உடலும், உயிரும் செயலிழந்து விடும். அப்படியான சூழ்நிலையிலும் ஆண்டவர் ஆத்துமாவை காத்து எம் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார்** என்று கூறப்படுகிறது. அதே போல் நாம் நித்தமும் சந்திக்கும் பிரச்சினைகள், துன்பங்களினால் வறட்சியினாலும் துவண்டு செயலிழந்து போயிருக்கும் போது எம்மால் நினைத்துக் கூட பார்க்க இயலாத மிகப் பெரிய செயல்களை எமக்குள் செய்யும் தேவன் எம் ஆத்துமாவை திருப்தியாக்கி **எம்மை புதுப்பெலன் அடையச் செய்யவும் வல்லவராயிருக்கிறார். ஆனபடியால் நீங்கள் அதைரியப்படாமல் தைரியமாயிருங்கள்! கர்த்தர் உங்கள் ஆத்துமாவை திருப்தியாக்கி ஆசீர்வதிப்பார். ஆசீர்வாதமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! உங்கள் தூய ஆவியினால் எம்மை நிரப்பி வறட்சியான எம் வாழ்விலே ஆத்தும திருப்தியளித்து எம் சரீரத்தை பெலப்படுத்தி எம்மை ஆசீர்வதிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்.
~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நான் சமாதானத்தை ஒரு நதியைப்போலவும், ஜாதிகளின் மகிமையைப் புரண்டு ஓடுகிற ஆற்றைப்போலவும் அவளிடமாகப் பாயும்படி செய்கிறேன்;..." (ஏசாயா 66:12)

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
19 வெள்ளி

எம் மீட்பர்
இன்றும்
உயிரோடிருக்கிறார்!

வேதவாசிப்பு
ஆதியாகமம்
அதி: 16–17

**"என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசிநாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன்."** (யோபு 19:25)

தேவனுக்குள் பிரியமானவர்களே! **தேவ கிருபையினால் எமக்கருளிய இப்புதுதினத்திலே ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவினால் வாழ்த்துகின்றேன்.** இன்றைய நாளில் புதிய ஆராக்கியமும் புதிய பெலனும் பெற்று மகிழ்ந்திருங்கள். **"நானே, வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்"** என்றுரைத்த இயேசுகிறிஸ்து இன்றும் உங்களோடிருந்து உங்கள் வாழ்வினை முன்னோக்கிக் கொண்டு செல்கிறார்.

தேவ பிள்ளைகளே! தேவனுடைய ஒரே குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை உங்கள் தனிப்பட்ட வாழ்க்கைக்குரிய சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டபடியால் நீங்கள் உலகத்தோர் மத்தியில் பேறுபெற்றவராவீர்கள். இன்றைய செய்தியின் பிரதான வசனத்தில் என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், **அவர் கடைசி நாளில் பூமியின் மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன் என யோபு கூறுவது சத்தியம் என ஏற்றுக் கொள்கிறீர்களா? நிச்சயமாகவே இது உண்மையானது என்பதை நாம் அறிந்ததே.** நீங்கள் பரலோக பிதாவை நோக்கி இயேசு என்னும் நாமத்தை சொல்லி ஜெபிக்கும் போது பரத்திலிருந்து பிதாவின் மூலமாக உங்களை நோக்கி பதில் வருகிறதல்லவா? ஏனெனில் நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ குமாரனின் பிதா மகிமைப்படும்படியாக அதைச் செய்வேன். என தேவ வசனம் கூறுகிறது.

அன்பான தேவ பிள்ளைகளே! **"தேவனுக்கும், மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே! எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக் கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து அவரே"...** என்று வேத வார்த்தைகளில் எழுதப்பட்டுள்ளது. அவர் எம் பாவங்களைப் போக்கவும், சாபங்களை நீக்கவும் சிலுவையிலே தம்மை கிருபாதார பலியாக ஒப்புக் கொடுத்தார். மரணத்தில் உயிர்த்தெழுந்து இன்றும் ஜீவனுள்ளவராக கிரியை செய்கிறார். ஆகையால் **நீங்கள் அவர் நாமத்தினால் ஜெபிக்கும் ஜெபங்களுக்கு பதில் கொடுக்க வல்லவராயிருக்கிறார்.** இயேசுகிறிஸ்து இன்றும் உயிரோடிருக்கிறார் என்பதை விசுவாசிக்கிறவர்களாய் இருந்து உங்கள் வாழ்வினிலே **ஜெயத்தை பெற்றுக் கொள்ளுங்கள். வெற்றிச் சிறந்த நாள்!**

ஜெபம்

மரணத்தை வென்று உயிரோடெழுந்தவரே உம்மை ஸ்தோத்தரிக்கின்றேன்! உங்கள் குமாரனை எமக்காய் ஒப்புக் கொடுத்தபடியால் நன்றி! எங்களுடைய பாவ சாபங்களை நீக்கி எங்களை ஆசீர்வதிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத

"ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்." (ரோமர் 6:5 )

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
20 சனி

## உங்கள் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாற்றும் தேவன்!

வேதவாசிப்பு
ஆதியாகமம்
அதி: 18–19

**"என் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாறப்பண்ணினீர்; என் மகிமை அமர்ந்திராமல் உம்மைக் கீர்த்தனம் பண்ணும்படியாக நீர் என் இரட்டைக் களைந்துபோட்டு, மகிழ்ச்சியென்னும் கட்டினால் என்னை இடைகட்டினீர்."**
(சங்கீதம் 30:11)

அன்புக்குரிய தேவ பிள்ளைகளே! ***ஜீவிக்கின்ற தேவன் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இன்று உங்கள் வாழ்வில் காணப்படும் புலம்பல்கள் நீங்கி ஆனந்தக் களிப்புண்டாவதாக என வாழ்த்துகின்றேன்.*** உலக மனிதர்களில் பலர் தம் உழைப்பின் பணத்தைக் கொண்டு உள்ளம் விரும்பியபடி செலவழித்து உண்டு, குடித்து உல்லாசமாக தம் வாழ்க்கையை அநுபவிக்கிறார்கள். இன்னும் ஒரு சிலர் தம் அன்றாட ஜீவியத்தை மிக வேதனையுடன் நடத்துகிறார்கள். தமது அன்றாட தேவைகளைக் கூட நிறைவு செய்து கொள்ள முடியாமல் அங்கலாய்ப்புடன் தவிக்கிறார்கள்.

தேவ பிள்ளைகளே! ***செல்வம், வசதி வாய்ப்புகள் சொத்துக்கள், சம்பத்துக்கள் இருந்தும் அதை அநுபவிக்க முடியாது நோய்வாய்ப்பட்டவர்களாக நோய்களுக்கு பரிகாரம் செய்து துக்கத்தோடு வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் சிலர் தமக்கேற்பட்டுள்ள நோய்களுக்கு பரிகாரம் செய்துக் கொள்ள பண வசதியின்றி வேதனையில் பரிதபிக்கிறவர்களாய் ஜீவித்துக் கொண்டிருக்கிறார்கள்.*** ஆயினும் உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக! ஏனெனில் மனிதர்களை உருவாக்கினவரான சிருஷ்டிகரான கர்த்தர் உங்கள் புலம்பலை ஆனந்தக் களிப்பாகவும் துக்கத்தை சந்தோஷமாக மாற்றுகிறவராய் இருக்கிறார். நீங்கள் மெய் தெய்வத்தை அறிந்தவராயிருப்பதாலும் இன்றும் அவரிலே விசுவாசம் கொண்டு ***உங்களை அவரிடம் அர்ப்பணிப்பீர்களாயின் உங்கள் வியாதிகள் நீங்கவும், நோய்கள் குணமாகவும், பிரச்சினைகள் நீங்கவும் நீங்கள் சந்திக்கும் சவால்களிலிருந்து விடுவிக்க தேவன் உங்களுக்கு துணையாயிருப்பார்.***

தேவனுடைய பிள்ளைகளே! ***மனிதனுடைய உள்ளத்தில் மகிழ்ச்சி காணப்படுமேயானால் உற்சாகமாக காணப்படுவான். அதே போல் உள்ளத்தில் சோகம் கொள்வானேயானால் சோர்ந்து போனவனாக இருப்பான். செல்வ செழிப்பு நிறைந்திருந்தாலும் உள்ளத்தில் சமாதானம் இல்லாவிடில் சந்தோஷத்தோடு காணப்படான்.*** ஆனால் ஆண்டவர் இயேசு கூறுகிறார் என்னுடைய சமாதானத்தை உங்களுக்கு உங்களுக்கு கொடுக்கிறேன். உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக என்று. எங்கள் துக்கங்களை ஏற்றுக் கொண்டார், பாடுகளை சுமந்துக் கொண்டார். ***அவர் இன்றும் எம்மோடிருப்பதால் எம் புலம்பலை நீக்கி எம் வாழ்விலே மிகப்பெரிய மகிழ்ச்சியை அருளுவார். மனமகிழ்ச்சியின் நாள்!***

ஜெபம்

அன்பான என் இயேசுவே! உங்கள் வார்த்தைகளுக்காய் ஸ்தோத்திரம்! என் வாழ்வின் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாற்றும்படி தேவரீர் எனக்கு உதவி ஒத்தாசையை நல்கி ஆசீர்வதிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"நீ நெகிழப்பட்டதும், கைவிடப்பட்டதும், ஒருவரும் கடந்து நடவாததுமாயிருந்தாய்; ஆனாலும் உன்னை நித்திய மாட்சிமையாகவும், தலைமுறை தலைமுறையாயிருக்கும் மகிழ்ச்சியாகவும் வைப்பேன்." (ஏசாயா 60:15)

ஜீவ மன்னா

ஒகஸ்ட்

21 ஞாயிறு

கர்த்தரின் கரத்தில்
வனைவதற்கு உங்களை
அர்ப்பணியுங்கள்!

வேதவாசிப்பு

ஆதியாகமம்
அதி: 20-21

"மதிகேடரே, வெளிப்புறத்தை உண்டாக்கினவர் உட்புறத்தையும் உண்டாக்கவில்லையோ?" (பரி.லூக்கா 11:40)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவனுள்ள தேவன் **இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இன்றும் உங்களைக் குறித்த அவரின் மேன்மையான திட்டங்கள் வாழ்வில் நிறைவேற வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.** தாயின் கருவிலே உருவாகச் செய்த தேவன் எம்மை அந்நாள் தொடக்கம் இந்நாள் வரையிலும் பாதுகாத்து முன்னோக்கிக் கொண்டு வருகிறார். அவர் எம்மை உண்டாக்கினவரும், உருவாக்கினவருமானபடியால் நாம் அவருக்கு சொந்தமானவர்களே. மறுபடியும் எம்மை உருவாக்க அதாவது அவர் விரும்பும் வகையில் எம் வாழ்வினை மாற்றியமைக்க அவரால் முடியும்.

பிரியமானவர்களே! **எரேமியா 18:6**இல் கர்த்தர் உரைக்கிறார் "**இஸ்ரவேல் குடும்பத்தாரே இந்தக் குயவன் செய்தது போல நான் உங்களுக்குச் செய்யக் கூடாதோ!**" இதோ "**இஸ்ரவேல் வீட்டாரே களிமண் குயவன் கையில் இருக்கிறது போல நீங்கள் என் கையில் இருக்கிறீர்கள்**" என்று. இதன் விளக்கம் **எரேமியா 18:4**இல் **குயவன் வனைந்துக் கொண்டிருந்த மட்பாண்டம் அவன் கையில் கெட்டுப் போயிற்று அப்பொழுது அதைத் திருத்தமாய் செய்யும்படிக்கு தன் பார்வைக்குச் செம்மையாய் வனைந்து வேறொரு மட்பாண்டமாக வனைந்தான். அதே போல் நாம் எம்மைச் சிருஷ்டித்த கர்த்தர் கரத்திலிருப்பதால் எம்மை உடைத்து உருவாக்க அவரால் கூடும்.**

தேவ பிள்ளைகளே! பிரதான தேவ வசனத்தில் அவரோடிருந்த பரிசேயனுக்கு அவர் கூறிய வார்த்தை "**மதி கேடரே வெளிப்புறத்தை உண்டாக்கினவர், உட்புறத்தையும் உண்டாக்கவில்லையோ**" என்பதாக. அவர் எம் சரீரத்தை மாத்திரமல்ல ஆத்துமாவையும் உருவாக்கினவர். நாம் எம் வெளித்தோற்றத்தை சுத்தமாகவும், அழகாகவும் வைத்துக் கொள்ளும்படி எந்நேரமும் முயற்சிக்கிறோம். ஆனால் **எம் உள்ளான இருதயமோ பொய், வஞ்சனை, பொறாமை போன்ற அநேக பாவங்களினால் அசுத்தமாய் காணப்படுகின்றது.** எமது உள்ளான இருதயத்தில் தேவனைப் பிரியப்படுத்தும் பரிசுத்தமான சிந்தனைகளே உருவாகட்டும். ஆகையால் எம் இருதயத்திலே ஆவியானவர் வாசம் பண்ணும்படியாக தேவன் எம்மை வனைவதற்கு அர்ப்பணிப்போம். அப்போது **எம்மை அவர் கரத்தில் பெருமதியான அழகான பாத்திரமாக மாற்றுவார். அப்பொழுது நாம் ஜெயம் பெற்றோராய் திகழ்வோம். ஜெயம் தரும் நாள்!**

ஜெபம்

குயவன் கையில் களிமண் போல் இருக்கும் என்னையும் நீர் வனையும் அன்பின் தேவனே உமக்கு கோடான கோடி ஸ்தோத்திரம்! என் ஆத்துமாவையும், சரீரத்தையும் உருவாக்கினவரே இன்றும் என் உள்ளத்தை பரிசுத்தப்படுத்தி உமக்கு பிரியமானபடி வாழ என்னை உடைத்து உருவாக்கும்படி இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"...நான் மனுஷனல்ல, தேவனாயிருக்கிறேன்; நான் உன் நடுவிலுள்ள பரிசுத்தர்;..." (ஓசியா 11:9)

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
22 திங்கள்

# இயேசுவின் நாமத்தைக் கொண்டு ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்வது எப்படி?

வேதவாசிப்பு
ஆதியாகமம் அதி: 22-23

**"...நான் என் நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்தும் எந்த ஸ்தானத்திலும் உன்னிடத்தில் வந்து, உன்னை ஆசீர்வதிப்பேன்."** (யாத்திராகமம் 20:24)

கிறிஸ்துவுக்குள் அன்பான தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இன்றைய நாளிலே பூரண சந்தோஷமும், சமாதானமும் உங்களை ஆளுகை செய்யும்படி ஆசீர்வதிக்கிறேன். தேவன் இப்பூமியிலே தமது நாமத்தினால் நம்மை ஆசீர்வதிக்கும்படியாகவே தெரிந்துக் கொண்டார்.** எப்படியெனில் அவரது சகல **"தேவ கட்டளைகளையும் கைக் கொள்ளும்படியாக அவரது சத்தத்திற்கு உண்மையாகவே செவி கொடுத்து நடப்போமாகில் தேவனாகிய கர்த்தர் சகல ஜாதிகளிலும் எம்மை மேன்மையாக வைப்பார். இது அவர் எமக்களித்த வாக்குத்தத்தமாகும்." உபாகமம் 28:1**

தேவ பிள்ளைகளே! உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக! இன்றைய எம் பிரதான தேவ வசனம் கூறுகிறது **அவரது நாமத்தை பிரஸ்தாபப்படுத்தும் எல்லா இடங்களிலும் எம் மத்தியில் இறங்கி வந்து எம்மை ஆசீர்வதிக்கிற தேவனாய் இருக்கிறார்** என்பதாக. அவருக்கென்று எம்மைத் கொண்டதுமன்றி அவர் ஆசீர்வதிக்கும் தேவனென வெளிப்படுத்தினபடியால் **நாம் அவருக்கு முன்பாக எவ்வளவு அருமையானவர்களாக இருக்கிறோம்.** உலகில் வாழும் பெருந்திரளான ஜனங்கள் இன்னும் அவரைக் குறித்து அறியாதிருப்பது மிகக் கவலைக்குரிய காரியமாகும். உலகத்தோர் உண்மையான தெய்வம் உண்டென்றால் எமக்கு அருள் புரியட்டும் என்றோ **ஐயோ தெய்வமே எமக்கு துணைபுரியுங்கள், கருணைக் கூருங்கள் என புலம்புகிறார்கள்.** ஆனால் மெய் தெய்வம் யார்? அவரது நாமம் என்னவென்று அறிவார்களாயின் அவரது நாமத்தின் மூலம் வரும் ஆசீர்வாதம் அவர்களுக்கு உரியதாகும்.

அன்பான தேவ பிள்ளைகளே! இயேசுகிறிஸ்துவை நெருங்கி அண்மிக்கிற வேளையில் ஆசீர்வாதங்களை சொந்தமாக்கிக் கொள்ளும்படியாக அவரிலே அன்புகூர்ந்து அவரையே சார்ந்திருக்க வேண்டும். அவரது கற்பனைகளை கைக்கொள்ளுவதன் மூலம் அன்பை வெளிப்படுத்த வேண்டும். **உபாகமம் 12:32**இல் **"நான் உனக்கு விதிக்கிற யாவையும் செய்யும்படி கவனமாயிரு நீ அதனோடே ஒன்றையும் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்றையும் குறைக்கவும் வேண்டாம்"** என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆதலால் இன்றும் உங்கள் வாழ்வின் முதலிடத்தை இயேசுகிறிஸ்துவுக்கே அளியுங்கள். **அப்போது நீங்கள் கூப்பிடும் போதெல்லாம் உங்களுக்கு செவி கொடுத்து ஆசீர்வாதங்களை அருளுவார். ஆசீர்வாதத்தின் நாள்!**

ஜெபம்

மகா வல்லமை நிறைந்த இயேசுவே! என்னைத் தெரிந்துக் கொண்டு உங்கள் நாமத்தை எனக்கு வெளிப்படுத்தி உம் கிருபையினால் எம்மை ஆசீர்வதித்து வழி நடத்தியபடியால் நன்றி! உம் நாமத்தினால் அநேக ஆசீர்வாதங்களையும், உன்னத பெலத்தையும் பெற்றுக் கொள்ள கிருபையளிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"இதோ, வானங்களும் வானாதிவானங்களும், பூமியும் அதிலுள்ள யாவும், உன் தேவனாகிய கர்த்தருடையவைகள்."
(உபாகமம் 10:14)

ஜீவ மன்னா

ஓகஸ்ட்

23 ஞாயிறு

உங்கள் வழிகளையும் செயல்களையும் விசாரித்தறியும் தேவன்!

வேதவாசிப்பு

ஆதியாகமம் அதி: 24–25

**"உன் நடக்கையும் உன் கிரியைகளுமே இவைகளை உனக்கு நேரிடப்பண்ணின; இது இத்தனை கசப்பாயிருந்து, உன் இருதயமட்டும் எட்டுகிறதற்குக் காரணம் உன் பொல்லாப்புத்தானே."** (எரேமியா 4:18)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற தேவன் இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தினால் இன்று வெற்றிச் சிறந்த நாளாவதாக என வாழ்த்துகின்றேன். "இதோ சீக்கிரமாய் வருகிறேன் அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது"** என **வெளிப்படுத்தல் 22:12** இயேசுகிறிஸ்து உரைத்துள்ளார். ஆகையால் எம் சகல செயல்களிலும், வழிகளிலும் நீதியை விளங்கச் செய்வது அவசியமாகும்.

அன்பான தேவ பிள்ளைகளே! எம் உள்ளத்தை காண்கின்ற தேவனாயிருக்கிறார். **அவர் அன்பு நிறைந்தவராய் இருப்பதால் நாமும் அன்புள்ளவர்களாய் அவரைப் போல விளங்க வேண்டும் என்பதையே அவர் எதிர்பார்க்கிறார்.** அதனால் எம் இருதயத்தில் பொறாமை, வைராக்கியம், குரோதம், பேராசை, வஞ்சனைகள் போன்ற தீமைகள் இருக்குமாயின் அவர் பிரியப்படுவதில்லை. எம் பிரதான வசனம் கூறுகிறது **எம் வழிகளின்படியும், செயல்களின்படியுமே நாம் பிரதிபலன் பெறுகிறோம் என்பதாக. (எரேமியா 4:18)** எருசலேம் நகரத்தோருக்கு அவர் கூறுகிறார் **"உன் நடக்கையும் உன் கிரியைகளுமே இது இத்தனை கசப்பாயிருக்கிறது உன் இருதயம் மட்டும் எட்டுகிறதற்குக் காரணம் உன் பொல்லாப்புத் தானே"** என்று.

தேவ பிள்ளைகளே! ஆத்மீகர்களாகிய எம் உள்ளத்திலே தீங்கான எண்ணங்கள், கபடமான சிந்தனைகள் போன்ற காரியங்கள் **காணப்படுமாயின் எம்மை நேசிக்கின்ற தேவன் எம் இருதயத்திற்கு துன்பத்தையோ, கசப்பையோ ஏற்பட இடமளித்து அதன் மூலம் எம் வழியை செம்மைப்படுத்துகிறார்.** ஒரு நாள் என் மனதுக்குள் ஏற்பட்ட ஒரு வேதனை என் இருதயத்தை மிகவும் வேதனைப்படுத்தியது. நான் தேவனை நோக்கி என்னால் ஒரு தவறு நேர்ந்திருந்தால் என்னை மன்னித்தருளி **அதைச் சீர்படுத்திக் கொள்ள எனக்கு உதவி செய்யுங்கள் என ஜெபித்தேன்.** சிறிது நேரத்தின் பின் அச்சிடப்படுகின்ற மன்னா இதழை வாசித்தேன் அதில் நான் உங்கள் மேல் என் கோபத்தை இறங்கப்பண்ணுவதில்லை, நான் கிருபையுள்ள கர்த்தர் என என்னோடு பேசினார். **நீங்கள் உங்களை எப்போதும் சீர்ப்படுத்திக் கொள்ளுங்கள். தேவனை மாத்திரம் பிரியப்படுத்துங்கள். ஜெயம் தரும் நாள்!**

ஜெபம்

எங்கள் நடக்கைகளையும், வழிகளையும் ஆராயந்தறிகின்ற தேவனே! உமக்கு நன்றி! எம்மை செம்மையான வழியிலே வழி நடத்தி உமக்கு பிரியமானபடி வாழவும், உமக்குள் நிலைத்து நிற்க கிருபை செய்தருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"மனுஷருடைய வழிகள் கர்த்தரின் கண்களுக்கு முன்பாக இருக்கிறது; அவனுடைய வழிகளெல்லாவற்றையும் அவர் சீர்தூக்கிப்பார்க்கிறார்." (நீதிமொழிகள் 5:21)

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
24 புதன்

எம்மை சீர்செய்யும்படியாகவே தேவன் தண்டனையை அனுமதிக்கிறார்!

வேதவாசிப்பு
ஆதியாகமம்
அதி: 26-27

"உன் நொறுங்குதலினாலும் உன் வேதனையின் மிகுதியினாலும் நீ கூக்குரலிடுவானேன்? திரளான உன் அக்கிரமத்தினிமித்தமும் பலத்துப்போன உன் பாவங்களினிமித்தமும் இப்படி உனக்குச் செய்தேன்." (எரேமியா 30:15)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! **ஜீவனுள்ள தேவனின் பரிசுத்த நாமத்தினால் இன்றும் ஆசீர்வாதங்களுடன் கூடிய நன்மைமான நாளே! என வாழ்த்துகின்றேன்.** எம் கர்த்தர் மிக நல்லவர் இதை வார்த்தைகளால் சொல்லி முடிக்க முடியாது. **அவருடைய நல்ல குணவியல்புகளுக்கு எல்லையே கிடையாது. இன்றும் அவர் அவ்வண்ணமாகவே நல்லவராகவே இருக்கிறார்.**

அன்பான தேவ பிள்ளைகளே! மேலே தரப்பட்ட வேத வசனத்தில் **எரேமியா 30:15**இல் "**கர்த்தரால் இஸ்ரவேலருக்கு சொல்லப்பட்டதாகும். உன நொறுங்குதலினாலும், உன் வேதனையின் மிகுதியினாலும் நீ கூக்குரலிடுவானேன். திரளான உன் அக்கிரமத்தினிமித்தமும், பலத்துப் போன உன் பாவங்களினிமித்தமும் இப்படி உனக்குச் செய்தேன்**" என்று. இஸ்ரவேலர் என்பது பூமியின் சகல ஜாதிகளின் மத்தியிலிருந்து தேவன் தமக்கு உரிய வம்சமாக பிரித்தெடுத்துக் கொண்ட ஜனக் கூட்டமாகும். தேவன் எம்மை இப்படியாகவே சகல ஜாதிகள் மத்தியிலிருந்து தெரிந்திருக்கிறார். ஆயினும் **அவரால் இஸ்ரவேலர்கள் தண்டனைப் பெற்று நொறுங்குதலினாலும், வேதனையின் மிகுதியாலும் கூக்குரலிடுவதாக என வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

தேவ பிள்ளைகளே! **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக! எரேமியா 30:15**இல் காணப்படும் விஷேசித்த காரணம் "**திரளான உன் அக்கிரமத்தினிமித்தமும், பலத்துப் உன் பாவங்களினிமித்தம் இப்படி உனக்குச் செய்தேன். இஸ்ரவேல் ஜனங்களின் அக்கிரமத்தின் நிமித்தம் விரோதிகளுடைய கைகளில் சிறைப்பட்டு துன்பத்திற்களாகினார்கள். இதற்கு தேவனை அனுமதித்தார்." அவர்களுடைய வேதனைகள் அதிகரித்த போது ஆத்துமாவிலே வியாகுலமடைந்து இதயம் புண்பட்டவர்கள் கூக்கிரலிட்டார்கள்.** நாமும் இப்படியாக அவருக்கு கீழ்படியாதிருந்தோமாகில் எம்மை எதிராளியிடம் சொற்ப காலத்திற்கு கையளித்து விடுவார். எமக்கு துன்பங்கள் நேரிடும். ஆகையால் கிறிஸ்து இயேசுவால் சிலுவை பலியின் மூலம் பாவ சாபங்கள் நீங்கப் பெற்று பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகிய நாம் பாவம் செய்ய அஞ்சுகிறவர்களாய் நடந்தோமாகில் எம் ஆத்துமா சுகமாய் வாழும். **மகிழ்ச்சிகரமான நாள்!**

ஜெபம்

சர்வ வல்லமை நிறைந்த தேவனே! உங்களுக்கு கீழ்படியாத மீறுதல்களுக்கு இடமளிக்கும் போது என்னைத் தண்டித்து என்னை மறுபடியும் உங்கள் அன்பினால் கிட்டிச் சேர்த்துக் கொள்கிறவரே இன்றும் என்னை திருப்திபடுத்தியருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"என் கண்கள் அவர்களுடைய எல்லா வழிகளின்மேலும் நோக்கமாயிருக்கிறது; அவைகள் என் முகத்துக்கு முன்பாக மறைந்திருக்கிறதில்லை; அவர்களுடைய அக்கிரமம் என் கண்களுக்கு முன்பாக மறைவாயிருக்கிறதுமில்லை." (எரேமியா 16:17)

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
25 வியாழன்

பொன்னைப் போலவும் வெள்ளியைப் போலவும் உங்களை புடமிடுவார்!

வேதவாசிப்பு
ஆதியாகமம் அதி: 28-29

"ஐயோ! தங்கத்துக்கொப்பான விலையேறப்பெற்ற சீயோன் குமாரர் குயவனுடைய கைவேலையான மண்பாண்டங்களாய் எண்ணப்படுகிறார்களே."
(புலம்பல் 4:2)

தேவ பிள்ளைகளே! **வானத்தையும், பூமியையும் உண்டாக்கிய தேவனுடைய நாமத்தில் இப் புதிய தினம் நன்மைகளுடன் கூடிய நல்ல நாளே என வாழ்த்துகின்றேன்.** சர்வலோகங்களையும் உருவாக்கினவரே நம்முடைய தேவன். **ஆதியாகமம் 1:1**இல் "**ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார் என்றும் பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையாயும் இருந்தது.... எனவும்**" எழுதப்பட்டுள்ளது. வெறுமையான நிலப்பரப்பிலே தேவன் இயற்கைக் கூடாக யாவற்றையும் உண்டாக்கினார்.

பிரியமான தேவ பிள்ளைகளே! நிலத்தின் அடியிலே காணப்படும் பொன், வெள்ளி, வைரக்கற்கள் போன்ற யாவற்றையும் படைத்தவர் எம் சிருஷ்டிகரான கர்த்தரே ஆவார். மண்ணுக்குள் மறைந்து கிடந்த பெறுமதி வாய்ந்த இப் பொருட்களை மனிதனுடைய கரத்தில் கிடைக்கச் செய்து அதன் பெறுமதியை காணச் செய்தார். **புலம்பல் 4:2** கூறுகிறது "**தங்கத்துக்கொப்பான ஒன்றைக் குறித்து அதாவது தங்கத்துக்கொப்பான விலையேறப்பெற்ற சீயோன் குமாரர் என்பதாக பொன்னில் அழகும் பளப்பளப்பும் இருந்தபடியால், மனிதர்கள் அதை உருக்கி தங்க ஆபரணங்களாக உருவாக்கி அணிகிறார்கள்.**" தங்க ஆபரணங்கள் அணிந்திருப்பவர்கள் மற்றவர்களுக்கு மத்தியில் தனித்தன்மையை வெளிப்படுத்துகிறார்கள். ஆயினும் **புலம்பல் 4:1**இல் "**ஐயோ பொன் மங்கி பசும் பொன் மாறி...**" என்றுரைக்கிறது.

தேவ பிள்ளைகளே! தங்கம் மினனும் பொழுது தான் அது அலங்காரமாயிருக்கும். தங்கம் இருளடைந்து, சுத்தமாயிருந்தால் அதில் பளப்பளப்போ மின்னுவதோ காணப்படாது போனால் அது அலங்காரமாய் இராது போனால் அதை அணிய யாரும் விரும்பமாட்டார்கள். பொன்னுக்குச் சமமான சீயோன் குமாரர்கள் (தேவ பிள்ளைகள்) குயவனுடைய கை வேலையான மண்பாண்டங்களாய் எண்ணப்படுகிறார்கள் என்ற இவ் வசனம் தேவ பிள்ளைகளின் ஆத்துமாவானது செழிப்பை இழந்து பெலவீனமாகி வாழ்க்கை மாறி போயிருக்கிறது என அர்த்தம் கொள்ளப்படுகிறது. ஆகையால் எம் செயல்களின் மூலமாகவே நாம் தேவனுடையவர்கள் என உலகிற்கு வெளிப்படுத்துகிறோம். ஆகையால் **தேவ பிள்ளைகள் எனப்படுவோர் தேவ ஆவியால் நிரம்பினவர்களாய் வாழ்வினை செழிப்பாக மாற்றி அவரது குணயியல்புகள் எம்மில் அலங்காரமாய் காணப்படும்படியாக நடப்பது அவசியமாகும். ஜெயத்தின் நாள்!**

ஜெபம்

உன்னதத்தின் தேவனே! என்னை தேவ ஆவியினால் நிரப்பி பொன்னாக அலங்கரித்தபடியால் நன்றி! மற்றவர்களுக்கு பிரயோஜனமான பாத்திரமாக என்னை மாற்றியமைத்து ஆசீர்வதிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அவர் உட்கார்ந்து வெள்ளியைப் புடமிட்டுச் சுத்திகரித்துக்கொண்டிருப்பார்; அவர் லேவியின் புத்திரரைச் சுத்திகரித்து, அவர்கள் கர்த்தருடையவர்களாயிருக்கும்படிக்கும், நீதியாய் காணிக்கையைச் செலுத்தும்படிக்கும், அவர்களைப் பொன்னைப்போலவும் வெள்ளியைப்போலவும் புடமிடுவார்."
(மல்கியா 3:3)

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
26 வெள்ளி

உங்கள் சோதனைக்கு
பின் வெற்றித் தரும்
யெகோவா நிசி!

வேதவாசிப்பு
ஆதியாகமம்
அதி: 30-31

"பின்பு ராஜா சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களைப் பாபிலோன் தேசத்திலே உயர்த்தினான்." (தானியேல் 3:30)

அன்பான தேவ பிள்ளைகளே! **நாட்களை புதியவைகளாக்கும் ஜீவனுள்ள தேவனின் தூய நாமத்தின் வல்லமையால் இன்றும் ஆறுதலின் நாளே! பொன்னைப் போல் எம்மை சுத்திகரித்துக் கொண்டிருக்கும் ஆண்டவர் இன்றும் எம்மோடிருக்கிறார்.** நீங்கள் யோபுவை குறித்து கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அவனைக் குறித்து ஆண்டவர் "**உத்தமனும், சன்மார்க்கனுமாகிய யோபுவைப் போல் பூமியில் ஒருவனும் இல்லை**" என கூறியிருக்கிறார். ஆயினும் அவன் துன்பத்தின் பாதையில் கடந்து வந்து கொண்டிருக்கும் போது நான் போகும் வழியை அவர் அறிவார். அவர் என்னைச் சோதித்த பின் நான் பொன்னாக விளங்குவேன் என்பதாக கூறினான்.

தேவ பிள்ளைகளே! ஆத்மீகர்களாகிய எம் வாழ்விலும் அன்றாட வாழ்க்கையிலே **அநேக பிரச்சினைகள், துன்பங்கள், உபத்தரவங்கள் ஏற்படுகிறது. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிலே என் ஆத்மிக வாழ்விலே பின்மாற்றமடைந்து போகிறோம்** ஆனால் நீதிமானும் சன்மாக்கனுமாகிய தேவ பயமுள்ளவனும் தீமைக்கு விலகுகிறதுமான மனிதனாகிய **யோபுவிற்கு அநேகமான சோதனைகள் ஏற்பட்டது.** ஆயினும் அவன் வாயினால் பாவம் செய்யாமலும் யாவையும் சகித்துக் கொண்டான். தேவனைக் குறை சொல்லவில்லையென்று வேதம் கூறுகிறது. **இதன் பலனாய் முடிவிலே இரண்டத்தனையான ஆசீர்வாதங்களை பெற்றான்.** இதைப் போல் **தானியேல் 3:30இல்** "**பாபிலோன் ராஜாவால் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் பாபிலோன் தேசத்திலே உயர்த்தப்பட்டார்கள்**" என்பதாக.

தேவ பிள்ளைகளே! **இவர்கள் மூவரும் பெரிய சவாலுக்கு முகங் கொடுக்க நேரிட்டது.** தேவ ஊழியர்களாகிய இவர்கள் பாபிலோனிலே நிறுவப்பட்ட **பொற் சிலையை வணங்காததின் நிமித்தம் அவர்கள் எரிகிற அக்கினிலே போடப்பட்டார்கள். ஆயினும் அவர்கள் தேவன் மீது விசுவாசமுள்ளவர்களாய் இருந்தபடியால் எரிகின்ற அக்கினிக்கு மத்தியிலும் பாதுகாப்பாக இருந்தார்கள்.** இதைக் கண்ட ராஜா பிரமித்துப் போனான். அவர்களின் தேவன் அவர்களுக்கு செய்த விடுதலையின் அற்புதத்தைக் கண்டு தேவனை மகிமைப்டுத்தினான். பாபிலோன் தேசத்தில் அவர்களை உயர்த்தினான். **இக்கட்டுகளில் எம்மை பாதுகாத்து விடுவிக்கும்படியாகவும், வாழ்க்கையிலே எம்மை மேன்மைப்படுத்தி உயர்த்தவும் இன்றும் அவர் எம்மோடிருக்கிறார். விடுதலையின் நாள்!**

ஜெபம்

பரலோகத்தின் என் பிதாவே! என் வாழ்க்கையிலே அநேக சோதனைகளுக்கு முகங் கொடுக்க நேரிடுகிறது ஆனாலும் அவை எல்லாவற்றிலிருந்து எம்மை விடுதலைப்படுத்தி பாதுகாத்து வழி நடத்துமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவராக;"
(1 பேதுரு 5:10)

ஜீவ மன்னா

ஒகஸ்ட்

27 சனி

உங்களை
இரட்சிக்கும்
தேவன்!

வேதவாசிப்பு

ஆதியாகமம்
அதி: 32-33

"உன்னை இரட்சிப்பதற்காக நான் உன்னோடே இருக்கிறேன்...."
(எரேமியா 30:11)

பிரியமான தேவ பிள்ளைகளே! **சத்தியத்தினாலும், அன்பினாலும் எம்மை வழி நடத்தும் ஜீவிக்கின்ற தேவன் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இன்று உங்களுக்கு இரட்சிப்பின் நாளாக வேண்டுமென வாழ்த்துகின்றேன்.** நீங்கள் இதைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள்? இன்று இரட்சிப்பின் நாளா? இரட்சிப்பின் நாள் என்றால் என்ன என்று உங்களால் நிர்ணயிக்க முடிகிறதா?

தேவ பிள்ளைகளே! இன்றைய நாளில் காலைப் பொழுதினில் வாசிக்க ஆரம்பிக்கும் நேரம் வரை **உங்கள் உள்ளம் நீங்களே தீர்த்துக் கொள்ள வேண்டிய கடினமான பிரச்சினையையோ, சவால்களையோ, உபத்திரவங்களையோ எண்ணி தவித்துக் கொண்டிருக்கின்றீர்களா?** இனறும் உங்கள் ஆண்டவர் உங்களைப் பார்த்துச் சொல்கிறார். **உங்களை விடுவிக்கும்படியாக அவர் உங்களோடிருக்கிறார் என்பதாக.** எப்படியெனில் உன்னை இரட்சிப்பதற்காக நான் உன்னேடே இருக்கிறேன் என்பதாக. இன்றைய நாளிலும் உங்கள் பிரச்சினைகளுக்கு மத்தியில் சிறைப்பட்டு போயிருக்கிறீர்களா? **ஐயோ நான் எப்படி இதிலிருந்து மீள்வது எப்படியென கலங்கித் தவித்து வாழ்ந்துக் கொண்டிருக்கிறீர்களா? அப்படியாயின் இனிமேலும் கலக்கமடையாமல் உங்கள் எதிர்பார்ப்பை விட்டு விடாதிருங்கள்.**

அன்பான தேவ பிள்ளைகளே! இயேசுகிறிஸ்துவைக் குறித்து சுவிஷேசம் அறிவித்த அவரது சீஷரான பவுல் அடிகளார் சொல்கிறார் **2 கொரிந்தியர் 4:29**இல் **"நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டு ஒடுங்கிப் போகிறதில்லை கலக்கமடைந்தும் மனமுறிவடைவதில்லை, துன்பப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை"** என்பதாக. அது பவுலடிகளார்க்கு கூறியது அல்லவா எங்களுக்கல்லவே என எண்ணக்கூடும். ஆயினும் உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக! பவுல் அடிகளார்க்கு மாத்திரமல்ல இயேசுவை விசுவாசிக்கிற அவரைப் பின் தொடரும் **தேவ பிள்ளைகளான உங்களுக்கும் அவர் அப்படியே செய்கிறார்.** அவர் நாமத்தை உங்கள் மீது வைத்திருப்பதால் சகல வழிகளிலும் உங்களை ஆசீர்வதித்து பூமியிலே உங்களை உயர்த்தி **உங்கள் மூலம் தேவ நாமம் மகிமைப்பட வேண்டும் என்பதே அவரது நோக்கமாகும். இன்றும் உங்களை இரட்சிக்கும் தேவன் உங்களோடிருக்கிறார். இரட்சணியத்தின் நாள்!**

ஜெபம்

என் பரிசுத்தமுள்ள பிதாவே! நீங்கள் எப்போதும் என்னோடிருப்பதால் நன்றி! உங்கள் உன்னதமான நாமத்தினால் என்னை மீட்டுக் கொண்டு என்னை வழிநடத்தி ஆசீர்வதிக்கும்படி இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்.

~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு." (2 கொரிந்தியர் 3:17)

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
28 ஞாயிறு

# உங்கள் துக்கத்தை சந்தோஷமாக மாற்றும் தேவன்!

வேதவாசிப்பு
ஆதியாகமம் அதி: 34-35

**"அப்பொழுது கன்னிகைகளும், வாலிபரும், முதியோருங்கூட ஆனந்தக்களிப்பாய் மகிழுவார்கள்; நான் அவர்கள் துக்கத்தைச் சந்தோஷமாக மாற்றி, அவர்களைத் தேற்றி, அவர்கள் சஞ்சலம் நீங்க அவர்களைச் சந்தோஷப்படுத்துவேன்."**
(எரேமியா 31:13)

அருமையான தேவ பிள்ளைகளே! **ஜீவனுள்ள தேவன் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் தேவ கிருபை நிரம்பிய மன மகிழ்ச்சியின் நாளாக அமைய பிரார்த்திக்கின்றேன்.** இரவு முழுவதும் சோகத்தில் ஆழ்ந்திருந்த உங்களுக்கு இப்புதிய காலைப் பொழுதினில் **உங்கள் வாழ்வினை அவர் கரத்திற்கு அர்ப்பணித்து ஜெபியுங்கள். தேவன் கொடுக்கும் சமாதானத்தை நாம் வாழுகின்ற உலகில் பெற முடியாது.**

தேவனுடைய பிள்ளைகளே! **சங்கீதம் 30:5**இல் தாவீது ராஜா கூறுகிறார் **"அவருடைய கோபம் ஒரு நிமிஷம் அவருடைய தயவோ நீடிய வாழ்வு சாயங்காலத்தில் அழுகை தங்கும் விடியற் காலத்திலே களிப்புண்டாகும்"** என்பதாக. ஆயினும் ஐயோ ஐயோ என் பிரச்சினைகளோடு நான் எப்படி மகிழ்ச்சியடைவேன் என எண்ணுகிறீர்களா? நீங்கள் சந்திக்க நேர்ந்த பிரச்சினைகள், துன்பங்களினால் மிகவும் வேதனைக்குட்பட்டவராய் **மனம் கலங்கிப் போயிருக்கிறீர்களா? பல வழிகளில் முயற்சித்தும் விடுபட வழி இல்லாத நிலையில் காணப்படுகிறீர்களா? எல்லா எதிர்பார்ப்புகளும் இழந்து போன நிலைமையில் சோகத்தில் வாழ்ந்துக் கொண்டிருக்கிறீர்களா?**

தேவ பிள்ளைகளே! ஆயினும் **ஒரு நாளும் உங்களை கைவிடாத தேவனாகிய ஆண்டவர் இன்றும் உங்களோடிருக்கிறார்.** நீங்கள் அவரை நோக்கி ஜெபிப்பீர்களேயானால் உங்கள் துக்கத்தை சந்தோஷமாக மாற்றி சஞ்சலங்களை நீக்கி, மகிழ்ச்சியை அருள தேவனால் முடியும். **இன்னுமாக பரம்பரையாக வரும் சாபங்கள், பாவங்கள் உங்கள் வாழ்க்கையை சிறுமைப்படுத்தி நெருக்கங்களைத் தருகின்றதா?** இவைகளிலிருந்து உங்களுக்கு விடுதலையளித்து **"உங்கள் துக்கத்தை சந்தோஷமாக மாற்றியமைக்க ஆண்டவரால் கூடும்."** அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும் என **சங்கீதம் 33:9**இல் கூறுகிறது ஆகையால் **"அவர் தம் வாயால் உங்களை நோக்கி உங்கள் சோகம் நீங்கி மகிழ்ச்சி கிடைப்பதாக என்று கூறினால் உங்கள் துக்கம் சஞ்சலம் நீக்கி சந்தோஷம் உங்களை நிரப்பும் இன்றும் அதை எதிர்பார்த்திருங்கள்." ஜெபங்களை ஏறெடுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்! சந்தோஷமான நாள்!**

ஜெபம்

எங்கள் துக்கத்தை சந்தோஷமாக மாற்றும் அன்பின் தேவனே! நாம் ஒவ்வொரு நாளிலும் முகங் கொடுக்கும் எல்லா சவால்களையும் மேற்கொள்ள கிருபையளிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்.

~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: நீங்கள் அழுது புலம்புவீர்கள், உலகமோ சந்தோஷப்படும்; நீங்கள் துக்கப்படுவீர்கள், ஆனாலும் உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்." (பரி.யோவான் 16:20)

ஜீவ மன்னா

ஒகஸ்ட்

**29** திங்கள்

## தம் ஜனங்களின் உரிமைகளை சுதந்தரித்துக் கொள்ள கட்டளையிடும் கர்த்தர்!

வேதவாசிப்பு

ஆதியாகமம்
அதி: 36-37

**"விதைப்புச் சமாதானமுள்ளதாயிருக்கும்; திராட்சச்செடி தன் கனியைத் தரும்; பூமி தன் பலனைத் தரும்; வானம் தன் பனியைத் தரும்; இந்த ஜனத்தில் மீதியானவர்கள் இதையெல்லாம் சுதந்தரிக்கக் கட்டளையிடுவேன்."**
(சகரியா 8:12)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! **ஜீவனுள்ள தேவன் இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தினால் இன்றும் உங்களுக்கு நன்மைகளுடன் சுபதினமாக அமைய வாழ்த்துகின்றேன்.** எங்கள் தேவனாகிய கர்த்தர் எம்மை ஆசீர்வதிக்கும்படியாகவே தெரிந்துக் கொண்டார். எம் வாழ்வில் அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்று மகிழ்ச்சியுடன் வாழும் போது **அவர் நாமத்தை மகிமைப்படுத்தும்படியாகவேயாகும். ஆகையால் உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!**

தேவ பிள்ளைகளே! இன்றைய எம் பிரதான வேதவசனம் **சகரியா 8:12**இல் உரைக்கிறது **"விதைப்பும் சமாதானமுள்ளதாயிருக்கும், திராட்சைச் செடி தன் கனியைத் தரும் பூமி தன் பலனைத் தரும். வானம் தன் பனியைத் தரும்"** என்று கர்த்தர் இஸ்ரவேலருக்கும், யூதருக்கும் இதை கூறியபடியால் இந்த வார்த்தைகள் எமக்கு சொந்தமாகிறது. ஏனென்றால் **நம் தேவக் குமாரரானகிய இயேசுகிறிஸ்துவின் மூலம் இரட்சிப்பைப் பெற்று அவரது பிள்ளைகளாக மாறி ஆத்மீக இஸ்ரவேலரானோம். ஆதலால் இன்றும் அவரது ஆசீர்வாதத்தின் உரிமை எமக்கு சொந்தமாகிறது. ஆதியாகமம் 26:12இல் ஆபிரகாமின் ஒரே மகனான ஈசாக்கை எவ்வண்ணமாக ஆசீர்வதித்தார் எனக் காண்கிறோம் ஆதியாகமம் 26:13இல் அவன் ஐசுவரியவானாகி வர வர விருத்தியடைந்து மகா பெரியவனானான் எனக் கூறப்பட்டுள்ளது.**

தேவ பிள்ளைகளே! **கம்பளை என்னும் ஊரிலிருந்து கொழும்புக்கு வந்து நான் தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்று மகிழ்ச்சியாய் வாழ்வது அவரது பிள்ளைகளுக்குரிய ஆசீர்வாதம் உண்மையானதாய் இருப்பதினாலேயாகும்.** நான் பையனாக இருக்கும் போதே கொழும்புக்கு வந்தபடியால் எனக்கு சொந்தமாயிருந்தது நான் அணிந்திருந்த ஆடைகள் மாத்திரமே. என் வாலிபப் பருவத்திலே இரட்சகரான இயேசுகிறிஸ்துவின் மூலம் என்னை அழைத்து தேவ இராஜ்யத்தின் சேவைக்கென தெரிந்துக் கொண்டதன் பின் **எம் குடும்பத்தினர் யாவரும் எல்லாவிதத்திலும் செழிப்பை பெற்று ஆசீர்வாதத்தோடு வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள்.** அவரது உரிமைகள் எமக்குரியதாய் இருப்பதினாலேயாகும். நீங்களும் உர்மைகளுக்கு உரியவர்களாக மாறி ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள். **ஆசீர்வாதத்தின் நாள்!**

ஜெபம்

எனக்கன்பான பரலோக தேவனே! ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூலம் என்னை உங்கள் சொந்த பிள்ளையாக மாற்றி ஆசீர்வாதமிக்க உரிமையான வாழ்வை அளித்தமையால் நன்றி! உங்கள் உரிமைகளை சுதந்தரித்துக் கொண்டு ஜெயத்துடன் வாழ கிருபையளிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அவர் நின்றுகொண்டு, கர்த்தருடைய பலத்தோடும் தம்முடைய தேவனாகிய கர்த்தருடைய நாமத்தின் மகத்துவத்தோடும் மேய்ப்பார்; ஆகையால் அவர்கள் நிலைத்திருப்பார்கள்; அவர் இனிப் பூமியின் எல்லைகள்பரியந்தமும் மகிமைப்படுவார்."
(மீகா 5:4)

ஜீவ மன்னா

ஒகஸ்ட்

30 செவ்வாய்

தேவன் உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் நன்மையுண்டாகும்படிச் செய்வார்!

வேதவாசிப்பு

வெளி. அதி: 38-39

**"அவர்கள் தங்களுக்கும், தங்கள் பின்னடியாருக்கும், தங்கள் பிள்ளைகளுக்கும் நன்மையுண்டாகும்படி சகல நாட்களிலும் எனக்குப் பயப்படும் படிக்கு, நான் அவர்களுக்கு ஒரே இருதயத்தையும் ஒரே வழியையும் கட்டளையிட்டு,"**
(எரேமியா 32:39)

அன்பார்ந்தவர்களே! ***ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக் கொள்ளும்படியாக எம்மை அழைத்த ஜீவனுள்ளவரான இயேசுகிறிஸ்துவினால் இன்றும் நல்ல நாளாக வேண்டுமென வாழ்த்துகின்றேன்.*** இன்றைய தினத்தில் எம் பிரதான தேவ வசனம் **எரேமியா 32:39**இல் கூறுகிறது ***"அவர்கள் தங்களுக்கும் தங்கள் பின்னடியாருக்கும், தங்கள் பிள்ளைகளுக்கும் நன்மையுண்டாகும்படி சகல நாட்களிலும் எனக்குப் பயப்படும்படிக்கு நான் அவர்களுக்கு ஒரே இருதயத்தையும், ஒரே வழியையும் கட்டளையிட்டு என்பதாக."*** இதன்படி உங்களுக்கு மாத்திரமல்ல உங்கள் பிள்ளைகளுக்கும் நன்மையையே உண்டாகும். தேவனானவர் உங்களோடே இருக்கிறார். ஆகையால் ***உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!***

தேவ பிள்ளைகளே! இஸ்ரவேலின் தேவனானவர் நம் விசுவாசத்துக்குரிய தேவனாயிருக்கிறார். அவர் தம் வார்த்தைகளை நிறைவேற்றுகிறார். **ஏசாயா 55:11**இல் கூறுகிறது ***"அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும். அது வெறுமையாய் என்னிடத்திற்கு திரும்பாமல் அது நான் விரும்புகிறதைச் செய்து நான் அதை அனுப்பின காரியமாகும் வாய்க்கும்"*** என்று. அதனால் ***முழு உள்ளத்தோடு அவரை விசுவாசித்து உங்கள் வாழ்விலே அவரது பொருத்தனைகளின் நிகழ்வை உணருங்கள்.*** விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம் என்று வேதம் கூறுகிறது. ஆகவே தேவனிடத்திலும் அவரது வார்த்தைகளிலும் விசுவாசமுள்ளவர்களாய் இருந்து நீங்களும் உங்கள் பிள்ளைகளும் நன்மைகளை உண்டாக்கிக் கொள்ளுங்கள்.

பிரியமான தேவ பிள்ளைகளே! ***படைப்பின் தேவனை அறிந்த ஆத்மீகர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளின் எதிர்கால வாழ்வினைக் குறித்து அறிந்துக் கொள்ளும்படியாக உலக மனிதர்களைப் போல் யாரையும் நாடி போகாதீர்கள்.*** முக்கியமாக உயிருள்ளவர்களுக்காக செத்தவர்களிடத்தில் விசாரிக்கலாமோ? **ஏசாயா 8:19**இல் ***"தேவனது வார்த்தைகளை அறிந்த நீங்கள் அந்த பக்கம் திரும்பாதீர்கள். நீங்கள் தேவனுக்குள் நீதிமானாயிருந்தால் பிள்ளைகளும் அப்படியே இருப்பார்கள். அப்போது உங்களுக்குப் பின் உங்கள் பிள்ளைகளுடைய வாழ்க்கையில் நிச்சயமாகவே நன்மையுண்டாகும்." மனமகிழ்ச்சியின் நாள்!***

ஜெபம்

பரலோக பிதாவே! நான் நீதிமான்களாய் விளங்கினால் எனக்கும் என் பிள்ளைகளுக்கும் நீங்கள் நன்மையுண்டாகச் செய்வீர்கள். ஆகையால் உங்களுக்குள் நீதிமானாய் வாழ எனக்கு தயை புரிந்தருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"...உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் திரும்பும்போதும், கர்த்தர் உன் பிதாக்கள்மேல் சந்தோஷமாயிருந்ததுபோல, உன்மேலும் உனக்கு நன்மை உண்டாகத் திரும்பவும் சந்தோஷமாயிருப்பார்." (உபாகமம் 30:10)

ஜீவ மன்னா

ஒகஸ்ட்

31 புதன்

சிறுமைப்பட்ட
நீங்கள் தேவனால்
மீண்டும் கட்டப்படுவீர்கள்!

வேதவாசிப்பு

ஆதியாகமம்
அதி: 40-41

**"இஸ்ரவேல் என்னும் கன்னிகையே, மறுபடியும் உன்னைக் கட்டுவிப்பேன், நீ கட்டப்படுவாய்; மறுபடியும் நீ மேளவாத்தியத்தோடும் ஆடல்பாடல் செய்கிறவர்களின் களிப்புள்ள கூட்டத்தோடும் புறப்படுவாய்."** (எரேமியா 31:4)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! **மாதத்தின் இறுதி நாளான இன்று தேவன் மாதம் முழுவதுமாக எம்மை வழி நடத்தியமைக்காக ஸ்தோத்தரிப்போம்!** அத்தோடு இன்றைய நாளில் வழியும், சத்தியமும் ஜீவனுமான இயேசுகிறிஸ்துவின் அளவற்ற அன்பு உங்களை வழி நடத்த என் வாழ்த்துக்கள். எங்கள் தேவன் எம்மை அளவற்று நேசிக்கின்ற தேவன் என்பதால் **அவர் சிருஷ்டித்த பிள்ளைகளை உலகில் சிறுமைப்பட இடமளிப்பதில்லை. உபத்திரவப்பட்டு வாழ்க்கை அழிந்து போக அவரால் கைவிடப்படுவதில்லை. ஆகையால் உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!**

தேவ பிள்ளைகளே! ஆத்மீக பிள்ளைகளான எங்களுக்கும் **தேவனின் விஷேசித்த கருணை எல்லா வேளையிலும் கிடைக்கின்றதென்று நான் விசுவாசிக்கின்றேன். நீங்களும் இதனை விசுவாசிக்கின்றீர்களா?** எரேமியா தீர்க்கதரிசிக்கூடாக மேலே கூறப்பட்ட வசனத்தை தேவன் கூறுவது தேவனின் சொந்த பிள்ளைகளாக வேறுபிரிக்கப்பட்டு தேர்ந்தெடுத்த ஜனங்களுக்காகும். தேவனால் தெரிந்துக் கொள்ளப்பட்ட எம்மை இயேசுகிறிஸ்துவுக்கூடாக தம்மிடம் அழைத்துக் கொண்டார். ஆகையால் **தேவன் இன்று எம்மோடு பேசுவது மறுபடியும் உன்னைக் கட்டுவிப்பேன் என்றல்லவா?** ஆத்மீக பிள்ளைகளான எமக்கு ஒவ்வொரு நாளும் பலவிதமான சவால்கள், பிரச்சினைகள், இன்னல்களுக்கு முகங் கொடுக்க நேரிடுகிறது. அப்பொழுது **எங்கள் ஆவிக்குரிய பெலன் குறைந்து போவதனால் நமது உள்ளம் அதைரியப்பட்டு இன்னுமாக என்றால் இந்த ஆத்மீக பயணத்தில் எனக்கு முன்னோக்கிச் செல்ல முடியாதென்று பின் தங்கி போய் விடக்கூடும். எங்கள் ஆத்துமா சோர்வடைந்து சிறுமைப்பட்டு விடலாம்.**

தேவ பிள்ளைகளே! ஆனாலும் எமக்குள் ஆத்மீக வீழ்ச்சி, பின் மாற்றம் ஏற்படுகின்ற போது மீண்டுமாக பெலப்படுத்தி **தேவன் வீழ்ந்த இடத்தில் நிலை நிறுத்தி கட்டியெழுப்ப ஆரம்பிக்கின்றார்.** எங்கள் பின் மாற்றத்தை அகற்றி மீண்டும் முன்னோக்கிக் கொண்டு செல்கிறார். **உங்களை கிட்டிச் சேர்ந்திருக்கும் மனிதர்கள் புறம்பே தள்ளினாலும் தேவன் உங்களுக்கு இரக்கங் காட்டி மீண்டுமாக உங்களை கட்டியெழுப்புவார். ஆசீர்வாதத்தின் நாள்!**

ஜெபம்

ஐசுவரியத்தின் தேவனே! நீங்கள் என் வாழ்க்கை வீழ்ந்துவிட இடமளியாது, ஆவியில் பின்மாற்றம் அடையாது மீண்டுமாக கட்டி எழுப்பும்படியால் ஸ்தோத்தரிக்கின்றேன்! இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்.

~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அவர்களை அவர்கள் தேசத்திலே நாட்டுவேன்; நான் அவர்களுக்குக் கொடுத்த தேசத்திலிருந்து அவர்கள் இனிப் பிடுங்கப்படுவதில்லையென்று உன் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றார்." (ஆமோஸ் 9:15)



அன்று தானியேலின் தேவன் ஜீவனுள்ள தேவன். அவர் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறவர். அவருடைய ராஜ்யம் அழியாதது. அவருடைய கர்த்தத்துவம் முடிவு பரியந்தமும் நிற்கும். தானியேலைச் சிங்கங்களின் கைக்குத் தப்புவித்து அவரே தப்புவிக்கிறவரும், இரட்சிக்கிறவரும் வானத்திலும், பூமியிலும் அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்கிறவருமாயிருக்கிறார் என்று உலகில் வாசம் பண்ணும் எல்லா ஜனங்களுக்கும், ஜாதிகளுக்கும் பாஷைகளில் எழுதியது தானியேல் இடைவிடாமல் ஏறெடுத்த முழங்கால் ஜெபத்தினால் அல்லவா? அன்று தெசலோனிக்கே பட்டணத்து மனிதர்கள் பவுலடிகளையும், சீலா எனும் சீஷரையும் குறித்து உலகத்தை கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்திருக்கிறார்கள் எனக் கூறியது. அவர்களது முழங்கால் ஜெபத்தின் வல்லமையால் நடந்த அற்புத கிரியைகளினால் அல்லவா? எங்கள் சபையிலும் வாரந்தோறும் வருகின்ற ஜனங்கள் சுகம், சமாதானம், விடுதலை ஆசீர்வாதம் பெற்றுக் கொள்வது நாம் நீண்ட நேரம் முழங்காலில் இருந்து ஜெபிக்கும் ஜெபத்தினால் அல்லவா?

தேவ பிள்ளைகளே! அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார். அவருடைய மகிமையை கண்டோம். அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது என பரி.யோவான் 1:14இல் எழுதப்பட்டுள்ளது. பரி.மாற்கு 16:20இல் எழுதியிருப்பது. சீஷர்கள் புறப்பட்டுப் போய் எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். அவர்களுடனே கூடக் கிரியையை நடப்பித்து அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார்கள்.




அதன் விளக்கமானது இயேசுவின் சீஷர்கள் புறப்பட்டுப் போய் பாரெங்கும் நற்செய்தியை பிரசங்கித்தார்கள். தேவனோ அவர்களோடிருந்து கிரியை செய்து அவர்களால் நடந்த அடையாளங்களின் மூலம் வார்த்தையானவரான மீட்பர் இயேசுகிறிஸ்துவின் வசனத்தை உறுதிப்படுத்தினார்கள் என்றாகும். தேவன் இன்றும் எம்மத்தியில் ஜீவனுள்ளவராக இருக்கின்றார். நாம் தேவனின் பாதத்தில் உபவாசத்தோடு முழங்கால் ஜெபத்தை ஏறெடுத்து பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைப் பெற்று இயேசுவின் நாமத்தில் எதையேனும் கேட்கும் போது அந்த வசனம் வல்லமையாக கிரியையை நடப்பிக்கும். ஏனென்றால் இயேசுகிறிஸ்து எமக்கு கொடுத்த வாக்குத்தத்தமான "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலனடைந்து" (அப்போஸ்தலர் 1:8) தேவ இராஜ்யத்தைக் குறித்து உள்ளத்தில் தாகத்தை உடையவர்கள் நீங்கள் அனைவரும் தேவ இராஜ்யத்தை கட்டி எழுப்புவதற்கு எல்லா தேவ சபைகளிலும் தலைமைப் போதகர்கள், உதவி தேவ ஊழியர்கள் அனைவரும் தேவனின் பாதத்தில் முழங்காலிருந்து நீண்ட நேர ஜெபங்களை, ஏறெடுத்து தேவ ஆவியானவரது வல்லமையைப் பெற்று, தேவ சபைகளில் தேவனின் நாமம் மகிமையடைய நீங்கள் மத்தியஸ்தம் பண்ணி ஜெபியுங்கள். நீங்களும் இவைகளுக்கு ஒத்தாசை செய்வதோடு, மற்றவர்களைப் பற்றி குறை கூறாதபடி மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாக உங்கள் வாழ்வை அமைத்துக் கொள்ளுங்கள். அப்படியே எல்லா மனிதருக்கும் ஆசீர்வாதமாக ஜீவியுங்கள். தேசத்தில் ஆத்மீக எழுப்புதல் உருவாகவும் இயேசுவின் நாமம் மகிமையடையவும் உங்கள் முழங்கால் யுத்தத்தை மேற் கொள்ளுங்கள்.

**கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!**

**போதகர் ஏ.ஜே.ஜோசப்**



# இயேசு கைவிடார் திருச்சபைக்கு செல்லும் வீதியின் வரைப்படம்.




1. புதிய தேவ சபை
2. பழைய தேவ சபை
3. களனி மின்சார நிலையம்
4. கோவில்
5. விஹாரை
6. 505 கராஜ்

## எங்களுடைய கணனி ஒளிபரப்பில் தொடர்பு கொள்வதற்கு...

Apple லும் Android கையடக்க தொலை பேசியின் மூலமும் டெப் வழியாகவும் Play store கிளிக் செய்து jesusnf என Type செய்து JNF MEDIA ஐ கிளிக் செய்யுங்கள்

Google.com » ustream.tv » jesusnf » jesusnf (click)


## இடைவிடாமல் உங்கள் ஜீவ மன்னா தின மஞ்சரியை பெற்றுக் கொள்ள வாசகக் கட்டணங்கள், காணிக்கைகள், சந்தோஷ காணிக்கைகளை எமக்கு தவறாது அனுப்பி வையுங்கள்!

**பணம் அனுப்ப**

கிராண்டபாஸ் தபால் காரியாலயம்
போதகர் ஏ.ஜே.ஜோசப்
என்னும் பெயருக்கு அனுப்புங்கள்.

**பணம் வைப்பிலிட**

போதகர் ஏ.ஜே.ஜோசப்
கணக்கு இலக்கம் 8076982701
கொமர்ஷல் வங்கி,
கிராண்டபாஸ் கிளை
பணத்தை வைப்பிலிட்டு
பற்று சீட்டை எமக்கு அனுப்பவும்



போதகர் ஏ.ஜே.ஜோசப்

ஜீவ மன்னா தின தியான புத்தகத்தை தபால் மூலம் ஒவ்வொரு மாதமும் பெற்றுக் கொள்ளலாம்.
விலாசத்தை அனுப்பவும்

R/N: QD/57/NEWS/2016


## இயேசு கைவிடார் சுவிசேஷ பணியகம்

இல:60/5, புதிய களனி பாலம் வீதி, ஒருகொடவத்த, வெல்லம்பிடிய. (பழைய டொயொடா நிறுவனக் கட்டிடம்).

011-2437189 011-2334865 071-4922929

arulandu.joseph@gmail.com www.jesusnf.org


இல:60/5, புதிய களனி பாலம் வீதி, ஒருகொடவத்த, வெல்லம்பிடிய ஜீவ மன்னா குட் நிவ்ஸ் பிரின்டஸ் அச்சகம் மூலம் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.